Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி- 30 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 05 (13.06.2005) திங்கட்கிழமை இதழ்:257

வெலா சலூன்
WELLA
Wella Hair Dressing
(குளிரூட்டப்பட்டது)
Haircuts, Facials, Stranghting
சலூனுக்கு தேவையான உபகரணங்கள் விற்பனைக்குண்டு.
இல,08, பருத்தித்துறை வீதி,
நல்லூர் மாக்கற்,
கல்வியங்காடு.
T.P 0773144965

# எத்தகைய எதிர்ப்புக்கள் வந்தாலும் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும்!



## கூட்டமைப்பினரிடம் சந்திரிகா உறுதிமொழி

கொழும்பு —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை புனரமைப்புச் செய்வதற்காக பொதுக் கட்டமைப்பு எந்த எதிர்ப்பு வந்தாலும் நிச்சயம் உருவாக்கப் பட்டே தீருமென்று ஜனாதிபதி சந்திரிகா - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களிடம் உறுதியளித்துள் ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமை பின் பிரதி நிதிகளை நேற்றுமாலை சந்தித்து விரி வான பேச்சுக்களை நடத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகளுக் கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக் கும் இடையேயான சந்திப்பு நேற்றுமாலை கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நடை பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புப் பிரதிநிதி களுடன் ஜனாதிபதி சந்திரிகா நடத்திய இந்தச் சந்திப்பின்போது - பொதுக்கட்ட மைப்பை அமைத்துக்கொள்ளல், திருமலை யின் தற்போதைய நிலைமை மற்றும் அரசி யல் நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மீள்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள் வதற்கு விடுதலைப் புலிகளையும் உள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பயங்கரவாதிகள் என்று கூறி

## விடுதலைப் புலிகளை ஒதுக்குவதென்றால் ஜே.வி.பி. எப்படி அரசில் இருக்க முடியும்?

### கேள்வி எழுப்புகிறார் ஜனாதிபதி சந்திரிகா

தீவிரவாத அமைப்புக்களுடன் இணைந்து அரசாங்கம் பணியாற்றக் கூடாது என்று கூறும் ஜே.வி.பி. - பயங் கரவாதக் கொள்கையை கைவிடுவ தாக அறிவிக்காத ஜே.வி.பி. எவ்வாறு அரசாங்கத்தில் இணைந்திருக்க முடி யும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் -

நாட்டின் ஆட்சிப்பொறுப்பு எமது தலைமையின் கீழ் இருக்கும்வரை வன்முறைகள் கொண்ட அமைப்புக் களை ஜனநாயக நீரோட்டத்தின் கீழ் கொண்டுவர அர்ப்பணிப்புடன் செயற் படப் போகின்றேன்.

இவ்வாறு இல்லாவிடின் பயங்கர வாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட ஜே.வி.பி. - இன்று அரசில் இணைந் திருக்கமுடியாது. தமது பயங்கரவாதக் கொள்கைகளைக் கைவிட்டதாக எழுத்து மூலமோ வாய்மொழி மூலமோ இன்று வரைஜே.வி.பி. தெரியப்படுத்தவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு உடன்பாடு நாளை மறுதினம் கைச்சாத்து?

கொழும்பு —

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பொதுக் கட்டமைப்பு உடன்பாடு நாளை மறு தினம் 15 ஆம் திகதி கைச்சாத்திடப் படும் என ஜனாதிபதி செயலக வட் டாரங்களை மேற்கோள்காட்டும் செய் திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பொதுக்கட்டமைப்பு ஏற்ப டுத்தப்படுவதற்கு இந்தியாவின் ஆத ரவைப் பெறும் நோக்குடன் அண்மை யில் இந்தியா சென்ற சந்திரிகா - அங்கு பிரபல்யமான சோதிடர்களைச் சந் தித்து ஆலோசனைகளைப் பெற்றுள் ளார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப் பட்ட பின்னர் நாட்டில் குழப்பமான நிலை ஏற்பட்டால் அரசைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் தெரியவரு கிறது.

நாடாளுமன்றைக் கலைக்காமல் அதனை இரண்டு மாதத்துக்கு ஒத்திப் போடுவது தொடர்பாகவும் ஜனாதிபதி சந்திரிகா தனது சட்டவல்லுநர்களு டன் கலந்துரையாடல்களை நடத்தி வருவதாகவும் செய்திகள் தெரிவிக் கின்றன. (தே)

## ரணிலுடன் ஆலோசனை: ஜனாதிபதி சந்திரிகா முடிவு!



## பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கு அஸ்கிரிய பீடாதிபதி ஆதரவு!

# ரணிலுடன் ஆலோசனை: ஜனாதிபதி சந்திரிகா முடிவு!

கொழும்பு

சுனாமி மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளை ஆலோசனை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நாளை இந்தச் சந்திப்பு நடைபெறுமென்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால், தம்மால் நாளை ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க முடியாதென்றும் இன்றே பங்கேற்க முடியுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதில் அனுப்பியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.



பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் வண.தம்மர அமிலதேரர்

# பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கு அஸ்கிரிய பீடாதிபதி ஆதரவு!

கொழும்பு

பொதுக்கட்டமைப்பில் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயங்கள் எதுவும் இல்லையென்பதால் இதுபற்றி அச்சப்பட வேண்டிய தேவை இல்லையென்று அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரகித்ததேரர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஏனைய பௌத்த பீடாதிபதி களுக்கும் இடையில் நடந்த சந்திப்பில் கலந்துகொள்ளாத அஸ்கிரிய பீடாதி பதி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் உத்தேச பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதி அளித்த விளக்கம் பற்றி (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பி. விலகினாலும் கூட அரசை ஐ.தே.க பாதுகாக்கும்!

## ஐ.தே.க.சிரேஷ்ட தலைவர் தெரிவிப்பு

கொழும்பு

சுனாமி நிவாரணசபை அல்லது பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின்னர் அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி. விலகுமானால் - அரசைப் பாதுகாக்க ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

தேசிய ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட முக்கிய நடவடிக்கையாகவே பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதை ஐ.தே.கட்சி கருதுகின்றது. எனவே இதனை ஏற்படுத்துவதற்கு ஆதரவு வழங்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு சேவை செய்ய சந்திரிகா புறப்பட்டுள்ளார்!

## ஜே.வி.பி. கடுமையாகச் சாடல்

கொழும்பு

கொழும்பில் எதிர்வரும் 14 ஆம் திகதி பொது மக்களைத் திரட்டி போராட்டம் நடத்தப்போவதாக ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

புத்தளத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஜே.வி.பியின் மத்தியகுழு உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸநாயக்க -

உயிர்த் தியாகங்களுக்கு மத்தியில் மக்களின் ஆணையுடன் அமைக்கப்பட்ட இந்த அரசாங்கத்தின் தலைவி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சேவகம் செய்யப் புறப்பட்டுள்ளமை இந்த நாட்டுக்குச் செய்கின்ற துரோகமாகும்.

இதை யார் செய்யப் புறப்பட்டாலும் ஜே.வி.பி. தடுத்துநிறுத்தும். ஜனாதிபதி சந்திரிகா சுனாமி பொதுக் கட்மைப்புத் (12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

EXPOAIR

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# சம்பூர்ண அரிச்சந்திரா நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்—

பாஷையூர் உதயதாரகை கலைமன்றம் நடத்தும் புனித அந்தோனியார் திருவிழா சிறப்பு கலை நிகழ்வும், முத்தாரக் கவிஞர் செகராசசிங்கத்தின் சம்பூர்ண அரிச்சந்திரா நூல் வெளியீடும் நாளை மறுதினம் மாலை 6 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகச் செயலாளர் செல்லையா மெற்றாஸ்மயில் தலைமையில்இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில்- பிரதம விருந்தினராக கலைஞர் அ.ஸ்ரீபனும், சிறப்பு விருந்தினராக அண்ணாவியார் இராஜேந்திரத்தின் புதல்வர் ரீ. எம். அன்ரனிப்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பாஷையூர் உதயதாரகை கலைமன்ற அனுசரணையுடன் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் பதித்து வெளியிடும் சம்பூர்ண அரிச்சந்திரா தென்மோடி நாட்டுக்கூத்து நூல்வெளியீட்டினைத் தொடர்ந்து கலைஞர் ஞா.செல்லக்குமார், கலைஞர் க.நேசத்துரை, கலைஞர் யோ.செப்ஸ்ரியாம்பிள்ளை, மரபுக் கலைச்சுடர் செ.இராஜேஸ்வரி ஆகிய மூத்த கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து சம்பூர்ண அரிச்சந்திரா தென்மோடி நாட்டுக்கூத்து, கலைஞர் அ.றொபின்சனின் பூவுக்குள் பூகம்பம் வரலாற்றைத் தழுவிய இசை உரை நாடகம் ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# சந்நிதியில் தங்கியிருந்த வயோதிபர் மரணம்

பருத்தித்துறை—

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய மடத்தில் தங்கியிருந்த வயோதிபர் ஒருவர் நேற்று மாலை நான்கு மணிக்கு உயிரிழந் தார்.

உயிரிழந்தவர் இரண்டு வருடமாக ஆலயத்தில் தங்கியிருந்த யோசெப் என்று அழைக்கப்படும் 70 வயது நபரே என்று வல்வெட்டித் துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பொலிஸாரினால் வல்வெட்டித் துறை மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் உறவினர்கள் சடலத்தை அடையாளம் காண வல்வெட்டித்துறை மாவட்ட பிரதேச சபை பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை சடலம் தொடர்பான மரண விசாரணை இன்று நடைபெறவுள்ளதாக வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி மயிலேறும் பெருமாள் தெரிவித்தார்.

# வேலணை ஆஸ்பத்திரி டாக்டர் திடீர் மரணம்!

வேலணை—

வேலணை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த வைத்தியர் திடீரென மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் நடைபெற்றது. இதில் மயில்வாகனம் இராசையா (வயது 70) என்ற வைத்தியரே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்றையதினம் வேலணை அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று கடமையாற்றிக்கொண்டு இருந்தபோது திடீரென உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்ட சிறிது நேரத்தில் அவர் மரணமடைந்துள்ளார்.

இவர் தனது 35 வருட கால சேவையில் ஒட்டுசுட்டான், அச்சுவேலி, வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு போன்ற இடங்களிலுள்ள மருத்துவமனைகளில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவு பிரதேசசபையின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

நெடுந்தீவு—

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ம.பற்றிக்டிறஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நெடுந்தீவின் கல்வி, சுகாதாரம், மருத்துவம், மின்சாரம், போக்குவரத்து மற்றும் துரித அபிவிருத்தித்திட்ட வேலைகள் போன்றவை தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பான அழைப்பிதழ்கள் திணைக்களங்களுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(113)

# நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் வீதிவிளக்குகள் பொருத்தப்படவில்லை நெடுந்தீவு மக்கள் விசனம்

நெடுந்தீவு—

நெடுந்தீவு பிரதேசத்தில் வீதி விளக்குகள் பொருத்துவதற்கென கடந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி மூலம் இரண்டு இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு இலங்கை மின்சார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதும் இதுவரைக்கும் அது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

கடந்த மூன்று வருடங்களாக மின்சார சபையினர் மூலம் மின் விநியோகம் இடம்பெறுகின்ற போதும் இன்று வரை வீதி விளக்குகள் இன்மையால் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டுவரும் மக்களது நன்மை கருதி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ள போதும் அதற்கான வேலை இடம்பெறாததால் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த இரு வருடங்களுக்கு மேலாக நெடுந்தீவு மேற்கு, கிழக்கு, மத்தி பகுதி மின் விஸ்தரிப்புகளுக்கென 15 இலட்சம் வழங்கப்பட்டபோதும் அது தொடர்பாகவும் மின்சார சபையினர் வேலைகளினை பட்டும் படாமலும் செய்து இழுத்தடித்துவரும் செயற்பாடும் சுட்டிக்காட்டத்தக்கதாகும். (113)

## வருடாந்த மஹோற்சவம்

பருத்தித்துறை—

கரவெட்டி தச்சந்தோப்பு பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்கிழமை தேர்த்திருவிழாவும், புதன்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

## விவசாயக் குழுக் கூட்டம்

வலி.தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேச விவசாயக்கூட்டம் நாளை பிரதேசத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்துக்கு சகல விவசாய சம்மேளனத்தின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மர்மப் பொருள் வெடித்து குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம்—

மட்டுவில் வடக்குப் பகுதியில் மர்மப் பொருள் வெடித்ததில் காயமடைந்த நிலையில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மட்டுவில் வடக்கு அம்மன் கோவிலடியை சேர்ந்த சின்னத்துரை சிவராசா (வயது 43) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மாடு கட்டுவதற்காக தொழுவத்திற்கு சென்றபோது கரையோரமாக இருந்த பொருளை கையிலெடுத்து அமத்தியபோது அப்பொருள் வெடித்துச் சிதறியது. இவர் உறவினர்களின் உதவியுடன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


## சிறு விளம்பரம்

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். **T.P - 0779122836** நேரம்: காலை 9.00 - 8.30 வரை

(1198)

**ராஜா** யாழ்ப்பாணம்

லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி லக்ஷ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி, ராமகிருஷ்ணா நடித்த

14ஆம் திகதி வரை

**சூர்யா**

ஆக்ஷன் படம்



பு.நே: 10.30, 2.30, 6.30 மட்டும்

**நாகம்ஸ்** சுன்னாகம்

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க 15ஆம் திகதி வரை

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்

61 ஆவது நாள்

**சந்திரமுகி**



காட்சிகள்

11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

இன்று முதல் இன்டி பென்டன்ஸ் டே டைரக்டர் ரோலண்ட் எம்ரீக் மீண்டும் முத்திரை பதிக்கும் படைப்பில்

**THE DAY AFTER TOMORROW**

நாளை மறுநாள் (தமிழாக்கம்)

சுனாமி போன்ற அழிவுகளை சித்தரிக்கும்

காட்சிகள்

புதிய நேரம்:- 10.30,2.30,6.30,9.30

**மனோகரா** யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந்த், கோபிகா, விவேக் நடித்த

**கனா கண்டேன்**



காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**நிரஞ்சனாஸ்** சங்கானை

உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

**அறிந்தும் அறியாமலும்**

பஸ் போக்குவரத்துபாதை

இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)


# தீப்பற்றிக்கொண்ட வர்த்தக நிலையம் எரிந்து சாம்பரானது

யாழ்ப்பாணம்—

கல்வியங்காட்டுச் சந்தியில் உள்ள கடைத் தொகுதியில் நேற்று நள்ளிரவு 1 மணியளவில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் வர்த்தக நிலையம் ஒன்று முற்றாக எரிந்து சாம்பரானது.

இந்தத் தீயினால் இரு மருங்கிலும் இருந்த கடைகளும், அரைக்கும் ஆலை ஒன்றும் தீயின் தாக்கத்துக்குள்ளாகியுள்ளது.

இதையடுத்து தீவிபத்து ஏற்பட்டுள்ள பகுதிக்கு விரைந்த மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரும், கோப்பாய் பொலிஸாரும், மக்களும் தீயைக் கட்டுப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லை.

(90)

# பனை மரம் முறிந்து வீழ்ந்தபோதிலும் மாணவர்கள் மயிரிழையில் தப்பினர்

பருத்தித்துறை—

கரவெட்டியில் நேற்றுக் காலை 10 மணியளவில் பனை மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் ஒரு மாணவன் கையில் முறிவு ஏற்பட்ட நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதுடன், மற்றொரு மாணவியின் துவிச்சக்கரவண்டி சுக்கு நூறாக உடைந்ததுடன், மாணவர்கள் இருவரும் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கரவெட்டிப் பகுதியிலுள்ள வீடொன்றின் வளவிலுள்ள பனை மரத்தைத் தறிக்கும் போது காற்றின் வேம் காரணமாக கயிறு அறுந்துள்ளது. இதே நேரம் தனியார் கல்வி நிறுவனத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்கள் பனை சரிந்து வீழ்வதைக் கண்டு தப்பியோட முயன்றபோது, மத்தணி, கரவெட்டி தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த சந்திரசேகரன் சர்வன்(வயது 11) என்பவர் கையில் காயமேற்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த ஜான்சி என்ற மாணவியின் சைக்கிள் நொருங்கியும் உள்ளது.

இதே நேரம் மின்கம்பியும் துண்டிக்கப்பட்டதால் அதனூடாகவும் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது. இதனை வேடிக்கை பார்க் வந்த சிறுவன் மின்கம்பியைப் பற்றிப் பிடித்ததால் மின்சாரம் பாயத் தொடங்கியதும் மக்களால்அவரும் காப்பாற்றப்பட்டார்.

மேற்படி சம்பவம் நடைபெற்றதும் பனை தறித்தவர்கள் தப்பியோடிவிட்டனர். இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (12)

## விபத்தில் காயம்

யாழப்பாணம்—

அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் லொறியும் மோட்டார் சைக்கிளும் எதிரெதிரே மோதிக் கொண்ட சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் சண்டிலிப்பாய்யைச் சேர்ந்த திருநாவுக்கரசு அனோதன் (வயது 27) அதே இடத்தைச் சேர்ந்த தவகுல சிங்கம் சுரேஸ் (வயது 22) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக தெல்லிப்பளை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.


## இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

**Muthayamal Educational Institutions**

RASIPURAM - 637 408, NAMAKKAL-(DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது ANNA (Engineering) University - PERIYA UNIVERSITY ஆகியவற்றின் பட்டதாரி (Degree Courses) நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் A/L சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| | | |
| B.Sc. Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths, Chemistry, Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S | 3 Years | Pass in All Subjects in any Discipline |

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical College இல் சேர்ந்து 3 வருட Diplomaவைப் பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் Pending Results முறையில் ஜூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியைத் தொடங்க வாய்ப்பு

Call : 0777 767818 / 011-4512591 for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER

2nd floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06. e.mail : peter@scholars-info.com

# ஜே.வி.பி ஆதரவை விலக்கினாலும் அரசைத் தொடர்வதற்குத் திட்டம்!

## ஜனாதிபதியிடம் ஆலோசகர்கள் தெரிவிப்பு



கொழும்பு —

பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின்னர் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 39 பேர் அரசாங்கத்திலிருந்து விலகினாலும் - நாடாளுமன்றில் பெரும்பான்மையைத் தக்கவைத்து தொடர்ந்தும் அரசாங்கத்தை நடத்திச் செல்லும் மாற்றுத் திட்டம் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களால் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் திட்டத்திற்கமைய தற்போது அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, மேலும் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியுமானால், அரசிற்கு நாடாளுமன்றில் பெரும்பான்மையைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமென அவர்கள் தெரிவித்தனர்.

தற்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 57 பேர், சமசமாஜக்கட்சியின் உறுப்பினர் ஒருவர், மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, அதாவுல்லா அணி ஆகிய கட்சிகளின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு, மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஹுசைன் பைலா குழுவின் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அண்மையில் அரசுடன் இணைந்துகொண்ட ரோகித போகல்லாகம ஆகியோரின் ஆதரவு அரசிற்கு கிடைக்கும்.

இவற்றைவிட மலையக மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன், ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான உடுவே தம்மாலோக தேரா, அபரக்கே புஞ்ஞானந்த தேரர் ஆகியோரது ஆதரவு அரசிற்குக் கிடைக்குமென்பது அவர்களின் ஆலோசனையில் அடங்கியுள்ளது.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்குமென்பதால் ஜே.வி.பி இல்லாமலே அரசிற்கு 107 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்குமென ஆலோசகர்கள் ஜனாதிபதிக்கு வழங்கிய திட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில், எதிர்க்கட்சி வரிசையில் ஜே.வி.பி அமர்ந்ததாலும், ஐ.தே.கவுடன் ஒன்றுசேர முடியாதென்பதால், அதனைப் பயன்படுத்தி சிறுபான்மை அரசாங்கத்தை நடத்திச்செல்ல முடியுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (தே)

## திருகோணமலையில் புலிகள் விமானத்தளம் அமைக்கவில்லை!

### கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

திருகோணமலை —

திருகோணமலையில் விடுதலைப் புலிகள் புதிய விமானத்தளத்தை உருவாக்கி வருவதாக வெளியான செய்திக்கு ஆதாரம் எதுவும் இல்லையென்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ் டொட்டயர் தெரிவித்தார்.

விமானத்தளம் அமைப்பதாகக் கூறப்படும் பகுதியை கடந்த 8 ஆம் திகதி எமது குழு சம்பூர் சென்று நேரில் பார்வையிட்டது என்றும் அங்கு விமானத் தளம் அமைக்கும் முயற்சிகள் எதுவுமில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

## ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றில் தாக்கல் செய்யுமாறு ஆலோசனை

கொழும்பு —

பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதே ஏற்புடையதாக இருக்கும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் முக்கிய அமைச்சர்கள் சிலர் ஆலோசனை வழங்க முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த ஆகியோர் உத்தேசப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வருவதே நல்லது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் எடுத்துக்கூற தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள உறுப்பினர்கள் சிலர் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆகியோரது எதிர்ப்புகளுக்கு மத்தியில் இந்தப் பொதுக் கட்டமைப்புத் தொடர்பான ஒப்பந்தில் கைச்சாத்திடுவது ஏற்புடையதல்ல என இந்த அமைச்சர்கள் சந்திரிகா குமாரதுங்கவிடம் எடுத்துக்கூறவுள்ளனர்.

## நட்வர்சிங்கின் பேட்டி வருத்தம் தருகிறது!

### பழ. நெடுமாறன் தெரிவிப்பு



கொழும்பு —

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் உருவாவதைத் தடுப்பதற்கு தம்மாலான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதாக உலகத் தமிழ் பேரமைப்பின் தலைவர் பழ நெடுமாறன் தெரிவித்துள்ளார். கொழும்பு வானொலி ஒன்றிற்கு கருத்துத் தெரிவித்த அவர் -

இலங்கை அரசிற்கு ராடர் கருவிகளை வழங்குவதோடு வான்படை விருத்திக்கான உதவிகளை வழங்கவுள்ளதாகவும், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் வழங்கிய செவ்வி வருத்தத்தை அளிக்கிறது.

இலங்கை அரசு எந்த நாட்டின் அச்சுறுத்தலுக்காக இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்ய முயல்கிறது? தற்போது பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்ய முயலும் இந்தியா யுத்தகாலத்தில் தனது சொந்த நாட்டு மக்களை விமானங்கள் மூலம் குண்டுபோட்டு அழித்தபோது அதனைத் தடுத்துநிறுத்த இந்தியா முயலவில்லை.

1962 சீனயுத்தம், 70 களில் பாகிஸ்தானுடனான முரண்பாடு எல்லாவற்றிலும் இலங்கை அரசாங்கங்கள் இந்திய எதிர்ப்பு நிலையை எடுத்தபோது தமிழ் மக்களும் தலைவர்களுமே இந்திய ஆதரவு நிலையை எடுத்தமையையும் பழநெடுமாறன் நினைவுபடுத்தினார். (01)

## சிவராம் கொலையாளிகள் விரைவில் கைதாவாராம்!

### பொலிஸ் அதிகாரி

கொழும்பு —

ஊடகவியலாளர் சிவராம் கொலையாளிகள் அடுத்த சில நாட்களில் கைது செய்யப்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக குற்றப் புலனாய்வு பிரிவு பணிப்பாளர் சரத்லூகொட தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில் -

சிவராம் படுகொலை தொடர்பாக தொடர்ந்து தகவல்கள் கிடைத்து வருகின்றன. நூற்றுக்குமதிகமானோர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு அவர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. அவர்கள் தெரிவித்த சில வீடுகளில் சோதனைகளும் நடத்தப்பட்டுள்ளன.

இந்தக் கொலையின் குற்றவாளிகள் அடுத்த சில நாட்களில் கைது செய்யப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தலுக்குத் தயார்!

கொழும்பு —

எந்தத் தேர்தல் வந்தாலும் அதை எதிர்கொள்ள தமது கட்சி தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது குறித்துக் கூறுகையில் -

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான கிளைச் சங்கங்கள், இளைஞர் மற்றும் மகளிர் சங்கங்களை நியமிக்கும் நட வடிக்கைகள் முழுவதும் பூர்த்தியடைந்து விட்டன. நாடு முழு வதும் 10 சங்கங்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

## புலிகளின் விமான ஓடுபாதையை அழிக்க யுத்தநிறுத்தம் தடையாக உள்ளதாம்!

### விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு —

விடுதலைப்புலிகளின் விமான ஓடு பாதையை நிர்மூலமாக்குவதற்கான பலத்தை விமானப்படை கொண்டிருப்பதாகவும் - ஆனால், போர்நிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருப்பதால் அதைச் செயற்படுத்த முடியாத நிலையில் விமானப்படை இருப்பதாகவும் விமானப் படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

தியத்தலாவ விமானப்படை பயிற்சி முகாமில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் -

போர்நிறுத்தம் நடைமுறையில் இல்லாத யுத்த சூழல் நிலவுமேயானால்- வான் தாக்குதல் மூலம் புலிகளின் விமான ஓடு தளத்தை அழிக்க முடியும்.

விடுதலைப்புலிகள் தமது விமான ஓடு தளத்தைப் பயன்படுத்தி தொடுக்கக் கூடிய எந்தவொரு தாக்குதல் நடவடிக்கைக்கும் முகம் கொடுக்கக்கூடிய வகையில் இலங்கை விமானப்படை அவதானமாகவும் தயார் நிலையிலும் உள்ளது.

அத்துடன், எதிர்காலத்தில் வான் பாதுகாப்பு ராடர் சாதனங்களைப் பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கென மிகப்பெரிய தொகையைச் செலவிட வேண்டியுள்ளதால் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொதுக்கட்டமைப்பிலிருந்து விலகுமாறு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அழுத்தமாம்!

கொழும்பு —

பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஆலோசனைகளை விலக்கிக்கொள்ளுமாறு - ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கும் செயற்பாடொன்று, அரசாங்கத்துக்குள்ளேயே முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிங்களப் பத்திரிகையான 'ஹிரு' தெரி வித்துள்ளது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஊடகத்துறை அமைச்சுப் பதவியிலிருந்து அமைச்சர் மங்கள சமரவீர விலகிக்கொண்டதும் இந்தச் செயற்திட்டத்தின் நடவடிக்கையினாலேயேயாகும். தனிப்பட்ட காரணத்தால் ஊடகத்துறை அமைச்சுப் பதவியிலிருந்து விலகியதாக அவர் தெரிவித்திருந்தாலும் பொதுக்கட்டமைப்பு அமைப்பது தொடர்பாக ஏற்படும் பிரச்சினையால் அரசாங்கம் பிளவுபடும் என்பது மங்கள சமரவீரவின் நம்பிக்கையாகவுள்ளது.

இந்த நிலையில் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்தும், ஜே.வி.பியினருக்கு எதிராக ஊடகத்துறையை நடத்திச்செல்வது இயலாத காரணம் என்பதால் அவர் இந்த அமைச்சுப் பதவியிலிருந்து விலகினார்.


இதனைவிட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பொதுக்கட்டமைப்பை அமைப்பதற்கு எதிரான வேலைத்திட்டங்களை மிகவும் சூட்சகமான முறையில் ஆரம்பித்துள்ளார்.

ஜாதிகஹெல உறுமய கண்டியில் உண்ணாவிரதம் நடத்திய இடத்துக்குச் சென்ற பிரதமர், உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட சோபித தேரருடன், பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் எந்தக் காரணம் கொண்டும் கையொப்பமிடப் படமாட்டாதெனவும், எனவே - உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டிருந்தார்.

ஆனால், இதனை வெளிப்படையாகத் தெரிவிப்பதற்கு மறுத்துள்ளார் எனவும் அந்தப் பத்திரிகை தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளது. (தே)

## சந்திரிகா வீடுசெல்ல நேரம் வந்துவிட்டது

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



கொழும்பு —

ஜனாதிபதி சந்திரிகா வீடு செல்ல வேண்டும் என்பது உறு தியாகிவிட்டது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கண் டியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

ஜனாதிபதி தற்போது கூட்டு முன்னணியை பாதுகாப்பதிலும், தனது இருப்பை பேணுவதிலுமே கவனம் செலுத்துகிறார். அவர் வீடு செல்லவேண்டிய தருணம் வந்துவிட்டது.

நவம்பர், டிசெம்பர் என காலம் தாழ்த்தாமல் வேண்டுமானால் டிசெம்பர் வரைக்குமான சம்பளத்தை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போகட்டும். உடனடியாகத் தேவைப்படும் தேர்தல்களை நடத்தட்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் ஐரோப்பிய சம்பியன் கிறிஸ் உக்ரைனிடம் தோல்வியுற்றது!

புயனஸ் அயர்ஸ் —

உலகக் கிண்ண உதைபந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் ஐரோப்பிய சம்பியனான கிறிஸ் அணி தோல்வியைத் தழுவியது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி அடுத்த ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் பங்கேற்க 32 நாடுகள் தெரிவு செய்யப்படவேண்டும். அவைகளை தெரிவு செய்ய தற்போது தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் ஐரோப்பிய சம்பியனான கிறிஸ் அணியும், உக்ரைன் நாட்டு அணியும் மோதின. இதில் உக்ரைன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. கிறிஸ் அதிர்ச்சித் தோல்வியைச் சந்தித்தது.

மற்றொரு ஆட்டத்தில் நெதர்லாந்து அணி 4-0 என்ற கோல் கணக்கில் பின்லாந்து அணியை வீழ்த்தியது. அடுத்து ஒரு ஆட்டத்தில் சவுதி அரேபிய அணி 3-0 என்ற கோல் கணக்கில் உஸ்பெகிஸ்தான் அணியைத் தோற்கடித்தது.

இன்னொரு ஆட்டத்தில் ஈரான் அணி 1-0 என்ற கோல் கணக்கில் உக்ரைன் அணியை வென்றது.

## அசார் - ஜடேஜா - மொங்கியா மீண்டும் சூதாட்ட சர்ச்சையில்!



ஹைதராபாத் —

அசாருதீன், ஜடேஜா, மொங்கியா உட்பட்ட கிரிக்கெட் வீரர்களுடன் தொடர்புண்டு என்று கிரிக்கெட் சூதாட்டத்தில் கைதான ஷோபன் மேத்தா பொலிஸாரிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

கிரிக்கெட் போட்டியில் சூதாட்டம் நடந்துவரும் விடயம் 2001ஆம் ஆண்டில் வெளியானது. குரோஞ்ஞே தலைமையிலான தென்னாபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தபோது, குரோஞ்ஞே சூதாட்டக்காரர்களுடன் தொடர்பு கொண்டு பேசியதை டெல்கி பொலிஸார் ஆதாரத்துடன் கண்டுபிடித்தனர்.

கிரிக்கெட் உலகையே உலுக்கிய இந்தக் குற்றச்சாட்டில் பாகிஸ்தான், அவுஸ்ரேலியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் உள்ளிட்ட பல நாட்டு வீரர்களுக்கு தொடர்பு இருந்ததும் அம்பலமானது.

இந்திய வீரர்களில் அசாருதீன், அஜய் ஜடேஜா ஆகியோர் சூதாட்டப் புகாரில் சிக்கினர். அவர்களில் அசாருதீனுக்கு ஆயுட்காலத் தடையும், ஜடேஜாவுக்கு 5 ஆண்டுகாலத் தடையும் விதிக்கப்பட்டது. ஜடேஜா நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்து தடையிலிருந்து தப்பினார்.

கிரிக்கெட் சூதாட்டப் பிரச்சினை அத்துடன் முடிந்துவிட்டது என்றிருந்த நிலையில் மீண்டும் புதிய புயல் கிளம்பியுள்ளது.

கடந்தமாதம் மும்பையில் பொலிஸாரிடம் சிக்கிய பிரபல சூதாட்டக்காரர் ஷோபன் மேத்தா கொடுத்த வாக்குமூலம் தான் புதிய புயுலுக்குக் காரணமாகும். அவர் கிரிக்கெட் வீரர்கள், மும்பை தாதாக்கள், சூதாட்டக் காரர்கள் ஆகியோருடன் தனக்குத் தொடர்பு இருந்ததை ஒப்புக் கொண்டுள்ளார். இதனை அகமதாபாத் மேலதிக பொலிஸ் அதிகாரி வீன் சாரா நேற்று வெளியிட்டார்.

அசாருதீன், ஜடேஜா, நயன் மொங்கியா (மூவரும் இந்தியா), குரோஞ்ஞே (தென்னாபிரிக்கா), மார்க் வோ (அவுஸ்ரேலியா) ஆகியோருடன் தனக்குத் தொடர்பு உண்டு என்று ஷோன் மேத்தா கூறியுள்ளார்.

இதுதவிர, மும்பை தாதாக்கள் சோட்டா சகீல், அமர்நாத் அருண்காவ்லி, குரு சதாம் ஆகியோருடன் தனக்கு நட்பு இருந்ததையும் அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். சர்வதேச அளவில் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த மார்க் பீட்டர், இங்கிலாந்தைச் சேர்ந்த பிளாக் 0365 ஆகிய புள்ளிகளுடன் தொடர்பு வைத்து சர்வதேச ஆட்ட விபரங்களை சேகரிப்பேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒரு அணி வெற்றிபெறுமா? தோல்வியடையுமா என்பதை முன்கூட்டியே கணிக்க ஏதுவாக ரொஸ், ஆடுகளத்தின் தன்மை, போட்டி நடைபெறும் இடத்தின் தட்பவெப்பநிலை, அணியின் திட்டம், வீரர்களின் உடற்தகுதி ஆகியவற்றைத் திரட்டி வந்ததாகவும் அவர் கூறினார்.


இதற்கிடையில் கிரிக்கெட் சூதாட்டக்காரர் ஷோபன் மேத்தாவுடன் தனக்கு எந்தவித தொடர்பும் இல்லை என்று இந்திய முன்னாள் விக்கெட் காப்பாளர் நயன் மொங்கியா மறுத்துள்ளார்.

இது தொடர்பாக மொங்கியா கூறுகையில் -

என் மீதான குற்றச்சாட்டு அடிப்படை இல்லாதது. எந்தவித அடிப்படையும் இல்லாமல் என்னுடைய பெயரை சர்ச்சையில் இழுத்துள்ளது. ஷோபன் மேத்தாவை நான் சந்தித்ததோ அல்லது அவருடன் பேசியதோ கிடையாது. அவரைக் கைது செய்தபோது தொலைக்காட்சியில்தான் பார்த்தேன். எனது கிரிக்கெட் வாழ்க்கையில் நான் எந்தவொரு கிரிக்கெட் சூதாட்டக் காரர்களுடனும் தொடர்பு வைத்ததில்லை. யாருக்கும் போட்டி தொடர்பான தகவல்களை தெரிவித்ததும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## விளையாட்டு

## சுனாமி நிதிக்கான போட்டி: சர்வானுக்கு பதில் கங்கூலி!



லண்டன் —

சுனாமி போட்டிக்கான எம்.சி.சி அணியில் சர்வானுக்குப் பதிலாக கங்கூலி இடம் பெறுவாரெனத் தெரிகிறது.


சுனாமி நிவாரண நிதி திரட்டுவதற்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது. இதில் எம்.சி.சி. லெவன், உலக லெவன் அணிகள் மோதுகின்றன. எம்.சி.சி அணியில் இடம்பெற்றிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சர்வானுக்கு பயண ஏற்பாட்டில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இவருக்குப் பதிலாக இந்திய அணியின் கப்டன் சௌரவ் கங்கூலிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கங்கூலி கூறுகையில் -

சுனாமி போட்டியில் பங்கேற்க அழைப்பு வந்துள்ளது. நாளை வேறெந்தப் போட்டிகளும் இல்லாத பட்சத்தில் பங்கேற்க வாய்ப்பு உள்ளது என்றார். ஏற்கனவே துடுப்பாட்ட நட்சத்திரம் சச்சின், முழங்கையில் சத்திரசிகிச்சை செய்துள்ளதால் விலகிக் கொண்டார். இவருக்குப் பதிலாக லக்ஷ்மன் இடம் பெற்றுள்ளார்.

## இறுதிப் போட்டியில் சபின், பெடரர்





பேர்லின் —

ஜேர்மனியில் ஹாலே ஓபன் ரெனிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் அரையிறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரர், டோமிஹாசுடன் மோதினார்.

இதில் பெடரர் 6-4, 7-6 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார். மற்றொரு அரையிறுதியில் ரஷ்ய வீரர் சபின், கனாஸை 6-3, 4-6, 6-2 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார். இறுதிப் போட்டியில் பெடரர் - சபின் மோதுகின்றனர்.

## பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப் போட்டியில் யாழ்,பேராதனை அணிகள் சம்பியன்!

யாழ்ப்பாணம் —

ரஜரட்ட பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட - பல்கலைக்கழகங்களுக்கிடையிலான 7 பேர் கொண்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் சமனிலையில் முடிந்தது. யாழ்ப்பாணம் மற்றும் பேராதனைப் பல்கலைக் கழகங்களின் ஆண்கள் பிரிவில் இணைச் சம்பியன்களாகத் தெரிவாகின.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் கடந்த 7ஆம் திகதி இரவு-பகல் ஆட்டமாக நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டி மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் அதிகாலை 1 மணிவரை நடைபெற்றது.

இந்தப் போட்டியின் லீக் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணி, பேராதனைப் பல்கலைக்கழகத்துடனான ஆட்டத்தில் 0-2 என்ற அடிப்படையில் தோல்வியுற்றது. மொரட்டுவ பல்கலைக்கழகத்துடனான ஆட்டத்தில் பனால்டி மூலம் 1-0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

அரையிறுதி ஆட்டத்தில் ரஜரட்ட பல்கலைக்கழகத்துடனான மோதல் சமனிலையில் முடிந்தபோதும், பனால்டி வாய்ப்பின்போது யாழ்.பல்கலைக்கழகம் 1-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியும் பேராதனைப் பல்கலைக்கழக அணியும் மோதின. ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிந்ததால், மேலதிக நேரம் வழங்கப்பட்டபோதும் இரு அணிகளுமே கோல் எதுவும் போடாததால் - இணைச் சம்பியன்களாகத் தெரிவாகின.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றில் பல்கலைக்கழக அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் முதல்முறையாக சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மைக் டைசனை வீழ்த்தினார் அயர்லாந்தின் மைக் பிராட்!



வொஷிங்டன் —

வொஷிங்டனில் நடந்த குத்துச் சண்டைப் போட்டியில் முன்னாள் சம்பியன் மைக் டைசனை அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த கெவின் மைக் பிராட் எதிர்த்து மோதினார்.

இதில் ஆறாவது சுற்றில் கெவின் மைக் பிராட், டைசனை வீழ்த்தினார். இந்தப் போட்டிக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டைசன், குத்துச் சண்டையில் இனி தன்னால் சாதிக்கமுடியாது எனவும், இதனால் தான் ஓய்வு பெறுவதாகவும் தெரிவித்தார்.

## யங்லயன்ஸ் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அல்வாய் மனோகரா அணி சம்பியன்!

பருத்தித்துறை —

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் - தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் - மனோகரா விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்டம் தொடங்கி முதல் பாதி வரை மிக விறு விறுப்பாக இருந்தது. இரு அணி வீரர்களும் சளைக்காமல் ஆடினர். இதனால் இடைவேளைக்கு முன்னர் இரு அணிகளாலும் எந்தக் கோலையும் அடிக்க முடியவில்லை.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோது கரணவாய் மத்தி அணியைச் சேர்ந்த கோல் காப்பாளர் காலில் காயமேற்பட்டு வெளியேறினார். இது மனோகரா அணிக்கு பெரும் சாதகமாக அமைந்தது.

மனோகரா அணியைச் சேர்ந்த கருணானந்தன் கிடைத்த உள் எறிகையை எறிந்தபோது, நேராக கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பியது.

அதன்பின்னர் மிக விறுவிறுப்பாக ஆட்டம் தொடர்ந்தபோது, ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கும்போது மனோகரா அணியினர் இரு கோல்களைப் போட்டு கரணவாய் மத்தி அணியை அதிர்ச்சிக்குள்ளாக்கினர். இதில் முதல் கோலை சி.நிரோஜனும், இரண்டாவது கோலை கருணானந்தனும் அடித்தனர்.

இதனால் மனோகரா அணி கரணவாய் மத்தி அணியை 2:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

தொடரின் நாயகனாக கரணவாய் மத்தி அணியைச் சேர்ந்த சிவதர்ஸனும், இறுதி ஆட்டத்தின் நாயகனாக மனோகரா அணியைச் சேர்ந்த சசிகாந்தும், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த ராஜேஸனும் தெரிவு செய்யப்பட்டனர். (12)

# சூழல் மாசடையாமல் இருந்தால் தான் அபிவிருத்தியில் முன்னேற்றம் காணலாம்

## சூழல் பாதுகாப்பு அதிகாரி தி.திருக்குமரன் தெரிவிப்பு

சங்கானை—

சூழலும், அபிவிருத்தியும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளது. சூழல் மாசடையாமல் இருந்தால் அபிவிருத்தியிலும் நாம் முன்னேற்றத்தைக் காணலாம். இந்த முன்னேற்றத்தைப் பெறுவதற்கு சூழல் சுற்றாடல் பாதுகாப்பை நாம் ஒவ்வொருவரும் பேணி நடப்பது அவசியமானதாகும் - என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சூழல் பாதுகாப்பு அதிகாரி தி.திருக்குமரன் தெரிவித்தார்.

சூழல் பாதுகாப்பு வாரத்தையொட்டி வலிமேற்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்பட்ட கருத்தரங்கு - வலிகாமம் மேற்குப் பிரதேச சபை தலைமையகம் சுழிபுரத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சூழல் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு என்பன பற்றி நாம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். மக்கள் தாமே சிந்தித்துச் செயற்படவேண்டும். இந்தச் சிந்தனை அவர்கள் மனதில் ஏற்படாததால் இப்படியான கருத்தரங்குகளை வைக்கவேண்டியுள்ளது.

சூழல் பாதுகாப்பு என்பது பல விடயங்களை உள்ளடக்கியதாகும். இயற்கை வளங்களை அழித்தல், சுகாதார சம்பந்தமான செயற்பாடுகளைப் புறந்தள்ளுதல் போன்ற விடயங்கள் இவற்றில் முக்கியமானதாகும். இயற்கை வளம் என்னும்போது மரங்கள் அழிக்கப்படுவதும், சூழலைப் பாதிக்கின்றது. ஒரு மரத்தை அழிக்கும்போது அதற்குப் பதிலாக இன்னொரு மரத்தை நட்டு மாற்றீடு செய்ய வேண்டும்.

அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்திலும் பார்க்க வன்னியில் ஆக்கக்கூடிய மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் அரைவாசிக்கு மேற்பட்ட மரங்கள் பற்பல காரணங்களால் அழிக்கப்பட்டுவிட்டன. மரம் இன்றேல் மழை இல்லை என்ற நிலை இதனால் உணரமுடிகின்றது. ஒவ்வொருவரும் முதலில் தனது வீடு, சுற்றாடலைப் பேணுங்கள், இதனால் சுற்றாடல் மாசடை வதை படிப்படியாக குறைத்துக் கொள்ளலாம்.

விவசாயத்தின்போது செயற்கைப் பசளைப் பாவனையைக் குறையுங்கள், இயற்கைப் பசளைகளை உபயோகியுங்கள். யாழ்.மாவட்டத்தில் புகையிலைச் செய்கை இந்த வருடத்தில் ஆகக்குறைந்தளவு விளைச்சலைக் கொடுத்துள்ளது. முன்னைய காலங்களில் பூவரசங்குழை முதலிய இயற்கைப் பசளையைப் பாவித்து கூடிய விளைச்சலைப் பெற்றவர்கள் - இன்று செயற்கைப் பசளையின் பாவனையை அதிகரித்ததாலே இந்த நிலை தோன்றியுள்ளது. இதே போல் மற்றைய பயிர்ச் செய்கைகளும் பாதிப்படைவதை அவதானிக்க முடிகின்றது.

குளிர்பானம் எனக் குடிக்கின்ற சிலவகை சோடாக்களில் எத்தலின் என்ற இரசாயனப் பொருள் கலக்கப்படுகின்றது. இது மெல்ல மெல்ல மக்களின் வாழ்வைக் கொல்லுவதற்கு காரணமாகவுள்ளது. ஏன் நாம் இளநீர் அருந்தக் கூடாது. தண்ணீரிலும் பார்க்க இளநீர் உடல் ஆரோக்கியத்துக்கும், எந்தவித இரசாயனக் கலப்புமின்றியும் இருக்கிறது. வெளிநாடுகளில் பிள்ளை பிறந்தவுடன் மட்டுமல்ல ஒன்பது மாதங்கள் தொடர்ந்து தாய்ப்பாலையே பிள்ளைகளுக்கு ஊட்டுங்கள் என்ற அறிவியல் ஆலோசனையை வலியுறுத்துகின்றனர். தாய்ப்பாலைக் கொடுக்காமல் வேறு எந்தவகையான பானங்களைக் கொடுக்கும் நாம் அவர்களுக்கு நஞ்சைக் கொடுக்கின்றோம் என்பதை உணரவேண்டும்.

எனவே உரப்பாவனை, பொலித்தீன் பாவனை, போன்றவற்றை தவிர்த்துக் கொள்ள ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். பிரதேசத்தை பசுமையாக்குங்கள். சூழலைப் பற்றி உங்களுக்குத் தெரிந்தவற்றை மற்றவர்களுக்கும் சொல்லுங்கள். ஒவ்வொருவரும் தானும் திருந்துவதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களையும் திருத்துங்கள் இதனால் சூழல் மாசடைவதையும், சுற்றாடல் பாதுகாப்பையும் நாம் பேண முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வலிமேற்கு சங்கானை அரசியற்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு தனதுரையில்-

நாங்கள் எங்களுடைய நாட்டை எப்படி வளப்படுத்த வேண்டும், பாதுகாக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு தனி மனிதனும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். சூழல் அழிவது தெரிந்துகொண்டும் அதைக் கட்டுப்படுத்த நாம் முயல்வதில்லை. மக்கள் எந்தவித விழிப்புணர்வும் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். எங்களுடைய காலம் முடிந்தால் சரியென்று இருக்கிறார்கள். எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வைப் பற்றி நினைக்காமல் இயற்கை வளத்தை அழிக்கின்றனர். குடியிருப்பு நிலங்களில் மணல் அகழ்வதால் அவை வயல் நிலங்களாக மாற்றமடைகின்றன. இவ்வாறான செயல்கள் தொடர்ந்து நடைபெற்றால் எமது மக்கள் குடியிருப்பதற்கே நிலம் இல்லாத நிலை தோன்றும்.

எமது கலை கலாசாரத்தை அழிப்பதற்கென்றெ திட்டமிட்ட முறையில் ஆக்கிரமிப்பாளர்களான இராணுவத்தினர் செயற்படுகின்றனர். இளம் சமுதாயம் சீரழிந்து போகின்றது. சமாதானச் சூழ்நிலையிலும் இராணுவத்தின் திட்டமிட்ட சீரழிவு நடவடிக்கைகள் குறைந்தபாடில்லை. விடுதலை நோக்கி நாம் நகர்ந்து செல்கையில் இவ்வாறான சீரழிவினால் மேலும் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

மண்வளம், நீர்வளம் பற்றி சிந்திக்காமல், மக்களின் சிந்தனை எல்லாம் எங்கேயோ செல்கின்றது. விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மூலம் கருத்தியல் மாற்றங்கள் மக்களுக்கு வர வேண்டும் என்ற நோக்கத்திலே தான் இவ்வாறான கருத்தரங்கு நடைபெறுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு பிரதேச சபைச் செயலாளர் வி.புஸ்பராணி தலைமையில் நடைபெற்றது. பொதுச் சுகாதார உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இந்த நிகழ்வில் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் முன்பள்ளி அசிரியர்கள், பிரதேச சபை ஊழியர்கள், பொது அமைப்பைச் சாந்தோர் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் பயன்தரு மரங்கன்றுகள் விநியோகமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (48)



வல்லைப் பாலப் புனரமைப்புப் பணிகள் வேகமாக நடைபெற்றுவருவதைப் படங்களில் காணலாம்.

## அடிக்கல் நாட்டு விழா

அச்சுவேலி—

அச்சுவேலி தனியார் பஸ் சங்கத்தின் புதிய மினிபஸ் தரிப்பிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா வல்லைவெளிப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது.

அச்சுவேலி தனியார் பஸ் சங்கத்தைச் சேர்ந்த சி.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - அடிக்கல்லை யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் நாட்டி வைத்தார். இந்த நிகழ்வில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ்.அதிகாரி பத்மநாதன் கலந்துகொண்டார். (14)

## பெண்களுக்கான ஊடகவியல் பயிற்சி

மானிப்பாய்—

மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் பெண்களுக்கான ஊடகவியல் பயிற்சியொன்று எதிர்வரும் 22, 23, 24 ஆம் திகதிகளில் ஊடகவள பயற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

ஊடகவியல் துறையில் பணியாற்றும் பெண்களும், இந்தத் துறையில் ஆர்வமுடைய ஏனைய பெண்களும் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்வதற்கு விண்ணப்பிக்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (100)

## பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

மானிப்பாய்—

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு - நெடுந்தீவு உதவி அரச அதிபர் அலுவலகத்தில் உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (100)

## கல்வி அபிவிருத்தி குறித்து செயலகத்தில் மாநாடு

சுதுமலை—

யாழ்.குடாநாட்டின் கல்வி அபிவிருத்தி குறித்த உயர்மட்ட மாநாடு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரசாங்க அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாண பாடசாலைகளின் நிலைமைகள், ஆசிரியர் மாணவர்களது ஆளணி பற்றிய விபரங்கள் ஆராயப்படவுள்ளன. வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வியாளர்கள், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (91)

## சுதுமலை, சாவற்கட்டு பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

மானிப்பாய்—

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலவலகத்துக்கு உட்பட்ட சதுமலை, சாவற்கட்டு பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு இன்று தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி எஸ். ஸ்ரனிஸ்லாஸ் தெரிவித்தார்.

வளர்ப்பு நாய்களை வைத்திருப்பவர்கள் தவறாறு தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறு கேட்டுள்ளதுடன், வளர்ப்பு நாய்களுக்கான குடும்ப அட்டையையும் பெற்றுக்கொள்ளும்படி அவர் மேலும் தெரிவித்தார்.

சுதுமலை அம்மன் கோவிலடியில் இன்று காலை 8.30 மணிதொடக்கம் 9.30 வரையும், சுதுமலை மயில்வாகனம் கடையடியில் காலை 9.45 தொடக்கம் 10.45 வரையும், சுதுமலை குண்டடி சனசமூக நிலையத்தில் காலை 11 மணி தொடக்கம் 12 மணிவரையும் -

நாளை மறுதினம் சுதுமலை அண்ணாமலை வீதிச் சந்தியில் காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரையும், சுதுமலை வேல்சாமி கோயிலடியில் காலை 9.45 மணி தொடக்கம் 10.45 மணிவரையும், சுதுமலை ஐங்கரன் வீதி கிருஷ்ணன் கோயிலடியில் காலை 11 மணிதொடக்கம் 12 மணிவரையும், சுதுமலை ஐங்கரன் சனசமூக நிலையத்தில் மதியம் 12 மணி தொடக்கம் 1 மணி வரையும் -

எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை சாவல்கட்டு கடற்தொழிலாளர் சனசமூக நிலையத்தில் காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரையும், சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தில் காலை 9.45 மணி தொடக்கம் 10.45 மணிவரையும், சாவற்கட்டு துர்க்கையம்மன் கோயிலடியில் காலை 11 மணி தொடக்கம் 12 மணிவரையும், சாவற்கட்டு முருகமூர்த்தி கோயிலடியில் மதியம் 12.15 மணி தொடக்கம் 1.15 மணிவரையும் -

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுதுமலை நாமகள் சனசமூக நிலையத்தில் காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரையும், சுதுமலை ஈஞ்சடி வைரவர் கோயிலடியில் காலை 9.45 மணி தொடக்கம் 10.45 மணிவரையும் தடுப்பூசி ஏற்றப்படுமெனஅறிவிக்கப்பட்டுள்ளது. (100)

## மின்சார ஒளியின்றி இருக்கும் மெலிஞ்சிமுனை பிரதேசம்!

ஊர்காவற்துறை—

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழுள்ள மெலிஞ்சிமுனை கிராமத்தில் 200 குடும்பங்களுக்குமேல் வசித்துவருகின்றனர். இந்தப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்து 7 வருடங்கள் ஆகியும் இதுவரை மின்சார வசதியின்றி வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் அன்றாடம் விளக்கின் ஒளியிலேயே வாழ்க்கையைக் கழித்துவருகின்றனர்.

இவர்கள் நாளொன்றுக்கு எரிபொருளுக்காக 30 ரூபா வீதம் மாதம் 900 ரூபாவைச் செலவு செய்து வருகின்றனர்.

இதனால் இந்தக் கிராம மாணவர்களின் கல்வியைத் தொடர பலவகையான பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. குறிப்பாக கிராமத்தைச் சூழ அடர்ந்த பற்றைக் காடுகள் காணப்படுவதால் மின்சாரத்தின் தேவை அவசியமாகக் காணப்படுகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் பல முறை தெரிவித்திருந்தபோதும் இதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

இது தொடர்பாகக் கிராமத்தின் மின்சார அவசியத்தை உணர்ந்து மிக விரைவில் மின்சார ஒளியை வழங்குமாறு இந்தக் கிராமத்தின் இளையோர் உயிர்ப்பூட்டல் குழு கோரிக்கை விடுத்துள்ளது.



## மறைந்த எழுத்தாளர் நந்தி நினைவாக




ஹெலியின் யந்திர உறுமல் கேட்டது. ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த வாறு வரதன் கூக்குரலிட்டான்.

'ஓ வாறுங்கோ, தூரத்திலே இரண்டு பொம்மர்களும் தெரியுது.'

சில விநாடிகளில், மேலே மூன்று விமானங்கள் - உயரத்திலே பருந்துகள் போல் இரு பொம்மர்களும், தாழ ஒரு ஹெலிகொப்டரும் வட்டமிட்டன. இதற்கிடையில் அந்த வட்டாரத்தில்

# பதுங்கு குழி

## சிறுகதை

## நந்தி

வாழும் குடும்பங்கள் தமது பதுங்கு குழிகளில் ஒதுங்கிக்கொண்டனர். காலை 4.45 பௌர்ணமி ஒளியில் பொம்மர்கள் குறிபார்த்துக் குண்டு வீசுவதற்குத் தகுந்த நேரம் என்ற பீதி எல்லோருடைய நெஞ்சையும் நெருக்கியது. இதற்கு முன் குண்டு வீச்சு இருதடவையும் இதே நேரத்தில் தான் நல்லூரில் நடந்தது.

வரதனின் வளவில் வேலியோரமாக வெட்டப்பட்டிருந்த பதுங்கு குழியில் அவன், அவனின் தாய் செல்லமணி, தங்கை வரதா, அவர்கள் வீட்டில் தங்கியிருக்கும் ரோசராணியும், மரியம்பீவியும், அவர்கள் இருவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவிகள்.


'பாட்டா, எங்களுக்கும் ஒரு பதுங்கு குழி வெட்டவேண்டும்', 'எங்கள் வகுப்பிலே எல்லாப் பையன்கள் வீட்டிலும் வெட்டியாச்சு' 'பதுங்குகுழி உயிருக்குப் பாதுகாப்பாம்' - இவ்வாறு ஐந்தாம் வகுப்பில் படிக்கும் வரதன் தன் தாயின் தகப்பனுக்கு பாடசாலையில் இருந்து வரும்போது சில நாட்களாகக் கூறி வந்தான். செல்லத்துரைக் கிழவன் நேற்றுமுன்வரை இதையெல்லாம் கேட்டுச் சிரித்துவிட்டுப் பேசாமல் இருந்தார். அந்த வட்டாரத்தில் இரு நாட்கள் குண்டுகள் மாடி வீடுகளில் விழுந்தது உண்மை தான். மாடி வீடுகள் போராளிகளின் காம்ப் என்ற எண்ணம் இராணுவத்துக்கு உண்டு. மாடி வீட்டு மச்சில் இருந்து 50 கலிபர் துவக்குப் பூட்டி ஹெலியைச் சுட்டு விழுத்த முடியுமாம். ஆனால், செல்லத்துரையின் வீடு மாடி அல்ல, அது பழைய நாற்சார் வீடுதான். அத்துடன் பதுங்குகுழி வெட்டுவதற்குக் குறைந்தது 500 ரூபா வேண்டுமே! 'மூன்று பொம்மர்களை வைத்துக்கொண்டு ஒவ்வொரு வீட்டின் மேலும் அவர்களால் குண்டுகள் போடமுடியாது. யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து 'ஷெல்' அடிக்கிறார்கள். அதற்குப் பதுங்குகுழிகளால் பிரயோசனம் இல்லை.' இப்படியாக, இலங்கை இராணுவத்தின் பரிமாணத்தை அறிந்த ஒருவர்போல் கிழவன் கூறிவந்தார்.

நேற்றுமுன்தினம், அதிகாலை 3.30 நல்லூரின் மேலே வானம் நொருங்கி ஒவ்வொரு வீட்டின் கூரைகளிலே இடித்து கல்களாகச் சொரிந்ததுபோன்ற ஓசை எல்லோரையும் அடித்து எழுப்பியது. காங்கேசன்துறையிலிருந்து போராளிகளின் மோட்டார் வான் ஒன்றைத் துரத்தி வந்த ஒரு ஹெலி, அதைக் கோட்டை விடவே ஏமாற்றத்தில் வெறிப்பிடித்து துயிலிலிருந்த பூமிமேல் சரமாரியாகச் சுட்டுத்தள்ளியது. அயலிலே ஒரு வீட்டில் தூக்கத்திலிருந்த ஒரு வயோதிபரை துப்பாக்கிக் குண்டு துளைத்தது. மற்றவர்கள் வீடுகளிலே எங்கும் துவாரங்கள். அவர்கள் வளவுகளிலே, வாழைகளிலே, பனைகளிலே, தென்னைகளிலே சன்னங்கள். அன்று நண்பகல் சீப்பிளேன் ஒன்று வந்து படமெடுத்துச் சென்றது. சீப்பிளேன் வந்துபோனால் பொம்மர் வரும் என்பது அனுபவம். வரதன் சொன்னான். 'கோள்மூட்டி வந்து போறான். நாளை ஆள்காட்டியைக் கூட்டிக்கொண்டு பொம்மர் வரும்.' சீப்பிளேனைக் கோள்மூட்டி என்றும், பொம்மருக்குத் திசையும், குறியும் காட்டும் ஹெலியை ஆள்காட்டி என்றும் பிள்ளைகள் பட்டம் சூட்டிவிட்டார்கள்.

அந்தியில் வரதனின் பாட்டா செல்லத்துரை இருவர் உதவியுடன் 'டானா' வடிவில் ஒரு பதுங்குகுழி வெட்டினார். பக்கத்துப் பிள்ளையார் கோயில் வளவில் சோடை போயிருந்த ஒரு தென்னை மரம் குழிக்குமேலே அடுக்குவதற்கு வேண்டிய குற்றிகளுக்கு உபயோகப்பட்டது. அவற்றின் மேலே மண்மூட்டைகள் வைத்து மண்ணால் மூடப்பட்டது.

கிழவன் உள்ளே போகவில்லை. வெளியே மிஞ்சிய ஒரு மரக் குற்றியின் மேல் குழிக்குக் காவலாளிபோல் இருந்தார். வாய்விட்டுக் கூறாவிட்டாலும், அந்தக் குழி அவர் மனதில் சவக்குழியை ஞாபகமூட்டியது. வரதன் தலையை நீட்டிப்பார்த்து 'பாட்டா உள்ளே வாங்கோ' என்று அவசரப்படுத்தினான். 'தேவையானால் வாறன்' என்றார் செல்லத்துரை; சாவகாசமாக வெற்றிலையை மென்று இரத்தச் சிவப்பாகத் துப்பிக்கொண்டிருந்தார்.

மேற்குத் திசையிலே இரு பொம்மர்கள் மாறிமாறிச் சத்தாருக்குக் கீழே இறங்கியபின் மேலே உன்னிப் போகும்போது பேரோசைகள் கேட்டன. 'ஆஸ்பத்திரியைச் சுற்றித்தான் அருச்சனை நடக்குது' என்று கிழவன் முணுமுணுத்தார். தொடர்ந்து ஹெலியின் சூடுகள்; அதை எதிர்த்து பையன்களின் 50 கலிபர் வெட்டுகள்; கோட்டையிலிருந்து ஷெல்லோசைகள், பூமியின் நான்கு திக்கும் அதிர்ந்தன.



'வாங்கோ பாட்டா.' மீண்டும் வரதன்.

'வாங்கோ பாட்டா, பதுங்குகுழி பாதுகாப்பு.' இது வரதா.

'நான் பாதுகாப்பான இடத்தில்தான் இருக்கிறேன்' என்று சொன்னார் செல்லத்துரை. கிழவனின் வாயில் ஒரு விரக்திச் சிரிப்பு அகப்பட்டது. 'இது பாதுகாப்பில்லை என்றால், உதுகும் பாதுகாப்பில்லைத்தான்'

வரதனுக்கும், வரதாவுக்கும் இந்தப் பேச்சு விளங்கவில்லை. மற்றவர்களுக்கு அவர் சொன்னது கேட்கவில்லை. கேட்டிருந்தால் பல்கலைக்கழக மாணவிகள் ஏதாவது அர்த்தம் கண்டிருப்பார்களோ! அவரின் பேச்சு அவர்களுக்கு மிகவும் பிரியமானதாகும். அவர் பேச்சில் கேலி, கிண்டல், சொட்டை, சிலேடை பிரயத்தனம் இல்லாது தானாக வந்து சிந்தனையைக் கிளப்பும், அல்லது அசிரத்தையைக் குழப்பும், ரோசமலரும், மரியம்பீவியும் சிரிப்பார்கள். நாணி அழுவார்கள், ஓடி ஒளிப்பார்கள், முடிவில் போய் இருந்து சிந்திப்பார்கள். தமது பேராசிரியர்களுக்கே இல்லாத விவேகமும், நிலைமையைப் புரிந்துகொள்ளும் சக்தியும் பாட்டாவுக்கு இருப்பதாகப் பேசிக்கொள்வார்கள்.

செல்லத்துரை சுருட்டுத் தொழில் புரிந்த காலத்தில் திறமையான தொழிலாளி. நாளுக்கு ஆயிரம் சுருட்டுகள் சுருட்டிவிட்டுத்தான் இருந்த இடத்தை விட்டு எழும்புவார். அவர் சுருட்டுக் கொட்டிலில் பேசும் பேச்சுகள் பிரசித்தம். தொழிலாளர் நன்மைக்காகப் பத்திரிகைகளைப் பகிரங்கமாகப் படிப்பதும் அவர்தான். 'அண்ணை நீ படிச்சிருந்தால் ஒரு அப்புக்காத்தாக வந்திருப்பாய்' என்று புகழ்ந்து சக சுருட்டுக்காரர் அவர் உச்சியில் ஐஸ் வைப்பர். அவருடைய பகிடிகளில் சிலேடையும், சொற்சாலமும் தாராளம்; அவற்றில் சில சொந்தச் சரக்கு, சில தேய்ந்துபோன இரவல்கள்; இன்னும் சில சுருட்டுக் கொட்டிலுக்கு வெளியே கூறமுடியாதன.

சுருட்டு முதலாளியின் சோலியாக கொழும்பு ஐந்துலாம்புச் சந்திக்கடைகளுக்குப் போய் வரும் செல்லத்துரை, அங்கே ஒரு கடையில் வேலைக்கு அமர்த்தப்பட்டு, வியாபாரம் பழகி, தானாகக் கொட்டாஞ்சேனை முத்துமாரியம்மன் கோயிலுக்கு முன்னால் சுருட்டுடன் சோப்பு, சீப்பு, பவுடர், சிகரெட் இத்தியாதி விற்கும் 'பேப்பர்' கடை போட்டார்.

தூரத்திலே யாழ்.ரவுனுக்கு மேலே குபீர் குபீர் குபீரெனப் புகை திரண்டு எழுந்தது. பக்கத்து வளவிலிருந்து பொன்னையா மாஸ்ரர் வேலிக்கு மேலால் பார்த்துச் சொன்னார். 'ரவுனிலை பல கடைகள் எரியுதாம். அவ்ரோ பிளேனிலிருந்து பெற்றோல் குண்டு வீசுகிறான்களாம்.' தமது பதுங்குகுழிகளிலிருந்து காலாறுவதற்கு அவ்வப்போது வெளியே வந்து அயலவர் செய்தி பரிமாறிக்கொள்வர். ஒரு பொம்மர் தாழப்பறந்தது. ஓசை குடலைக் கலக்கியது. பொன்னையா பதகளிப்புடன் பதுங்குகுழிக்குத் திரும்பிவிட்டார். செல்லத்துரை அப்படியே இருந்தார். அவருக்கு 1958 ஆம் வருடம் கொழும்பில் தனது கடை சிங்களக் காடையர்களால் தீயிட்டுப் பொசுக்கப்பட்ட ஞாபகம் வந்தது. அவர் அகதிக் கப்பலில் யாழ்ப்பாணம் அடைந்து, உடுத்த வேட்டி சால்வையுடன் சுதந்திரமாகத் தனது வீட்டுக்கு வந்தபோது அவரது மகள் செல்லமணி விளையாடிக்கொண்டிருந்தாள்.

ஒருமாதப் பிள்ளை அப்படியே அள்ளிக்கொஞ்சியது நேற்றுப்போல இருக்கிறது. இதையெல்லாம் கிழவன் பேரப்பிள்ளைகளுக்குக் கூறியிருக்கிறார். அது அவருக்குப் பொழுதுபோக்கு, சிறுவர்களுக்கும் உபகதைபோல் ருசியானது. அவர் சொல்லுவார்; 'நான் உயிர் தப்பினது கடவுள் செயல். உங்கள் அம்மா அதிஷ்டக்காரி.' வரதன் விடுவானா? 'அப்படியிருந்தும் திரும்பவும் கொழும்புக்குப் போனனீங்கள்தானே பாட்டா?' என்று கேட்பான். அவரது விடை ஒரு புன்னகையாய் மலர்ந்து, ஒரு நொடியில் அவிட்டுச் சிரிப்பாக வெடிக்கும்.

'பேய்த்தனம்தான்'

அவர் ஒத்துக்கொள்வார்.

'1971 இல் எனக்குத் தலையில் இரும்புக் கம்பியால் அடிச்சுப்போட்டாங்கள். மயக்கமடைந்து விழுந்துபோனேன்.'

கடை மறுபடியும் எரிந்துவிட்டது. புதிய கடை அது.

ஒரு முஸ்லிம் நண்பரால் (மரியம்பீவியின் தந்தை) காப்பாற்றப்பட்டு, மட்டக்களப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே மீண்டும் சுதந்திரமாகச் சுவாசித்து, உடல் குணமாகி யாழ்ப்பாணம் வந்தார். செல்வமணி அப்போது ருதுவாகியிருந்தாள்.

'அவள் அதிஷ்டக்காரி'

இந்தச் சம்பவத்துக்கு அவள் இராகமும், தாளமும் அமைத்துக் கூறும்போது பேரப்பிள்ளைகளும், பீபியும் தம்மை மறந்த நிலையில் இருப்பர்.

இப்போது தாலி இழந்து, நிறப்புடைவைகள் அணிவதைத் தவிர்த்து 30 வயதில், நாடகத்துக்குக் கிழவி வேடம் போட்டவள்போல் தோன்றும் செல்லமணி அக்கா 1971 இல் வாலைக் குமரி - ரோசமலரும் சோடனை செய்து கற்பனையில் களிப்பாள்.

1971 கலவரத்தின்போதும் 'என்ரை தலை தப்பியது அவளால்தான்.'

இனக்கலவரமும் காடையரின் அட்டகாசமும் தொடங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பே மகளின் கல்யாண வைபவத்துக்கு நல்லூர் வந்துவிட்டார்.

அவருக்கு அப்போது சொந்தமாகக் கடை இருக்கவில்லை. இரு இழப்புகளின் பின் அந்த ஆசை போய்விட்டது. கொழும்புக் கோட்டை ரயில்வே ஸ்டேஷனின் முன்னிருந்த ஆனந்த பவானில் கஷியராக வேலை செய்தார். அந்தக் கலவரத்தின்போது ஆனந்தபவானின் முதலாளியின் மகனும், கஷியர் சீற்றில் அப்போது இருந்த ஒரு சிப்பந்தியும் படுகொலை செய்யப்பட்டார்கள். ஹோட்டல் ராட்சத அடுப்பில் வெந்து கரியாயிற்று.

'நான் இந்தப் பதுங்குகுழிக்கு ஏற்கன்வே வந்து தஞ்சமடைந்ததால், இப்ப உங்களுக்குக் கதை சொல்லுறன்' என்பார் செல்லத்துரை.

'பதுங்குகுழியா?' கேட்பாள் வரதா.

பாட்டா செல்லத்துரை ஒரு சின்னச் சிரிப்போடு தன் அடர்த்தியான மீசையைத் தடவிவிடுவார். 1977 ஆம் ஆண்டில் தன் மகளின் கல்யாணம் நடைபெற்ற அந்தக் காட்சிதான் அவர் மனதில் நிலைத்து நிற்கின்றது. தான் வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டிச் சேர்த்துவைத்ததில் கலவரக் கள்வர்களிடமிருந்து தப்பியவற்றை எல்லாம் சேர்த்து ஒரு அரசாங்க உத்தியோகஸ்தரை மாப்பிள்ளையாக எடுத்தார். மருமகன் சிவபாலன் ரெயில்வே குமாஸ்தா லட்சணமும், குணமும் பொருந்திய பையன்.

'சிங்களப் பகுதியில் இனி வியாபாரம் செய்யமுடியாது. அரசாங்கவேலை என்றால் நிரந்தரமானதும், பாதுகாப்பானதும்.' இப்படிச் செல்லத்துரை சொன்னார். எத்தனையோ யாழ்ப்பாணத்தவர்போல் அவரும் தப்புக்கணக்குப் போட்டுவிட்டார்.

1983 - கொள்ளை எனக் கோதாரி எனப் பரவிய இந்த வருடத்தின் சிங்களப் பயங்கர வாதத்தைப் பற்றிச் செல்லத்துரை தனது பேரப்பிள்ளைகளுடன் பேசுவதில்லை. அவர் மனம் அவற்றைக் கதையாகக் கூறமுடியவில்லை. அந்த ஆண்டு வரதனுக்கு ஐந்து வயது, வரதாவுக்கு மூன்று. அப்பா, சுவாமியிடம் போட்டார் என்றுமட்டும் செல்லத்துரை அவர்கள் தகப்பனைப் பற்றிக் கூறினார். அப்படியே அவர்களும் எண்ணினார்கள் என்று சென்ற வருடம் வரை நம்பினார். குழந்தைகள் எப்போதும் குழந்தைகள் என்றும், சிறுவர்களும் எப்போதும் சிறுவர்கள் என்றும் நினைப்பு.

போன வருடம் மீன் பிடிப்பதற்குப் படகில் போன முப்பது தமிழர்கள் கறுப்புச்சட்டை அணிந்த சிங்களக் கூலிப் படையினரால் வாள்களால் வெட்டித் துண்டமாக்கப்பட்டார்கள். இந்தத் திடீர் படையினர் இனக்கலவரங்களின் போது கலவரம் செய்யும் காடையர்; துப்பாக்கி உபயோகிக்கத் தெரியாதவர்கள். பத்திரிகையில் வந்த இந்தச் செய்தியை செல்லத்துரை வீட்டுக்கு வந்த ஒருவர் சல்லாபித்தபோது வரதன் சொன்னான்.

'மாமா, எங்கள் அப்பாவையும் இப்படித்தான் வெட்டிக்கொன்றார்கள்' இதைக் கேட்டுக்கொண்டிருந்த கிழவன் திகைத்துப்போனார். 1983 இல் அநுராதபுரம் ரயில்வே ஸ்டேஷனில் கடமையாற்றிய ஸ்டேஷன் அதிபர் உட்பட மூன்று தமிழர்கள் அலங்கோலமாகத் துண்டிக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் வரதனின் தகப்பன். பிரேதத்தை யாழ்ப்பாணம் கொண்டு வரும் நிலையில் அது இருக்கவில்லை.

ஒரு பாரிய வெடிச்சத்தம், அருகாமையில் குண்டு விழுந்ததுபோல் கேட்டதுடன் நிலம் அதிர்ந்தது.

'அப்பு வாவன், அவரைக் குடுத்திட்டன், நீயும், என்னையும், பிள்ளைகளையும் அநாதரவாக விட்டுவிட்டுப் போகப்போறியா?

மகள் செல்லமணி பதுங்குகுழியின் வாசலில் தலையை நீட்டிக்கெஞ்சினாள். கிழவன் மெல்லக் காலை எடுத்துக் குழியின் முதல் படியில் வைத்து மெல்ல இரண்டாம் படியிலும் வைத்து அப்படியே இருந்துவிட்டார்; உள்ளே போகவில்லை. உள்ளே ஒரு இருட்டு; எறும்பு, பூச்சி, கறையான், பாம்பு வராது தெளிக்கப்பட்ட கமக்ஸின் மண்ணெண்ணெய் நாற்ற உபத்திரவம் வேறு.

நேற்றுக்காலையிலே பத்திரிகையிலே வந்த ஒரு செய்தியைக் கிழவன் வீட்டில் யாருடனும் பரிமாறிக்கொள்ளவில்லை. பதுங்குகுழி அமைப்பதற்குத் தீர்மானித்துவிட்டார். ஆகவே அதன் மேல் பிள்ளைகள் வைத்துள்ள நம்பிக்கையைக் குறைக்க அவர் விரும்பவில்லை.

'பலாலி முகாமிலிருந்து நடைபவனியில் வந்த இராணுவத்தினர், வளலாய்க் கிராமத்தில் பதுங்குகுழியில் பதுங்கி, பாதுகாப்புக்கு இருந்த ஒரு குடும்பத்தின் ஆறு பேரையும் வெளியே இழுத்துச் சுட்டுக்கொன்று விட்டார்கள்.' இது தான் அந்தச் செய்தி.

'இது இந்த மண்ணுக்கு மேலே ஆபத்தென்றால் உதுக்கும் ஆபத்துத்தான்.' அதை மீண்டும் வாயைத் திறந்து கூறவில்லை; மீசையை வருடிக்கொண்டார். நல்லவேளையாக தரை மார்க்கமாக நல்லூருக்கு இன்னும் இராணுவம் வரமுடியவில்லை. அதுதான் ஆகாயத்திலிருந்து இவ்வளவு அட்டகாசம். இந்த ஆகாயத் தாக்குதலில் இருந்து பதுங்குகுழி நல்ல இடம் தான். கிழவன் யோசனை செய்து கொண்டிருந்தார்.

சமீபகாலத்தில் நம்பமுடியாத அபூர்வமான, அதிசயமான உண்மைச் செய்திகளும், அதீத கற்பனையுள்ள எழுத்தாளருக்கே மனதில் மருளாத நிகழ்ச்சி வர்ணனைகளும் பத்திரிகைகளில் வருவது சர்வசாதாரணமாகிவிட்டன. ஷெல்களும், ஹெலியிலிருந்து சூடுகளும் புரிந்த சோகக் கூத்துகள் அவை; கல்யாணப் பந்தலில் ஷெல் - மணமகன் மரணம்; மரண வைபவத்தில் ஹெலியின் வேட்டுகள் - புரோகிதர் உட்படச் சகலரும் அயல்வீடுகளில் தஞ்சம்; வைத்தியசாலை வார்ட்டில் ஷெல் - ஆறு நோயாளிகள் மரணம்; வீட்டின் மேல் ஷெல் - ஒரு குடும்பத்தில் ஐவர் மரணம்; கோயிலிலே, கோபுரத்திலே, பாடசாலையிலே, அம்புலன்ஸ் வண்டியிலே ஷெல், ஷெல்.

என்றாலும், இதுவரை கிழவன் சாதாரண வாழ்க்கையை நடத்தினார். கோயில், குளம், வயல், வாய்க்கால், கடைத்தெரு ஒன்றையும் குறைக்கவில்லை. கிழவனின் போக்கு மற்றவர்களுக்குத் துணிகரமாகவே தோன்றியது. சில

நாட்களுக்கு முன் அயலவர்கள், மேகத்தின் முழக்கத்தைக் கேட்டுப் பதுங்குகுழிகளுக்குள் ஒதுங்கினார்கள்.

ஓசை ஒன்றும் கேட்கவில்லை. 'இன்றைய வேட்டை முடிஞ்சுபோச்சு, என்றவாறு செல்லமணி தகப்பனை விலக்கிக்கொண்டு பதுங்குகுழியிலிருந்து வெளியே வந்தாள். கிழவனின் மனம் அவளைப் பார்த்தது: 'செல்லமணி! ஒரு கலவரங்களின்போது பிறந்து, ஒரு கலவரத்திலே ருதுவாகி, மற்றொன்றில் மாங்கல்யம் பெற்று, ஒரு கொடூர கொடுமையின்போது விதவையானவள்.'

அந்த இனக்கலவரங்களின் ஆழமான நினைப்பு செல்லத்துரைக் கிழவனின் மனதில் நியாயமான சிந்தனையைத் தோற்றுவித்தது. இப்போது நடைபெறுவது கிழவனுக்கு ஒரு போராகவே தோன்றியது. ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும், தமிழ்ப் போராளிகளுக்குமிடையே அது நடைபெறுகிறது. போரைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. அவருக்குப் புரியாதது: அந்த வாரங்கள், அந்த வருடங்கள். 1956 முதல் 1983 வரை போர் இல்லை. ஆயுதம் தாங்கிய தமிழ்ப் போராளிகள் இருக்கவில்லை.

'அந்தக் காலத்திலை காந்தி வழியில் சத்தியாக்கிரகம் நடந்தது.'

'அரசியலிலே உரிமைகள் கேட்டு எமது தலைவர்கள் சமரசப் பேச்சுக்குப் போனார்கள்.'

ஒப்பந்தங்கள் எழுதப்பட்டன. கிழவனுக்கு அரசியல் விடயங்கள் தெளிவான மனப்பாடம். ஆனால் அந்தக் காலத்தில் கலவரங்கள் மூண்டன. பெறுமதி இல்லாத நிகழ்வுகள். அயலவர் மனஸ்தாபம், தனிப்பட்ட வியாபாரப் போட்டி, பொறாமை, காமவிகாரம், யார் குற்றவாளியாக இருந்தாலும் கலவரத்தை உண்டாக்கியது. அந்தக் கலவரங்கள் காட்டுத்தீயும் சுழல் காற்றும் சேர்ந்ததுபோல் பரவும்; தொட்டம் தொட்டமாக, பரவலாக, திடீர் திடீரென, கொடூரமாக தமிழர் பாதிக்கப்படுவர். செல்லத்துரைக் கிழவனின் நெஞ்சு விம்மியவாறு ஒரு நிமிடம் நிலைகொண்டது.

'வடக்கும், கிழக்கும் எமது பதுங்குகுழிகள்.'

ஒவ்வொருவராக பதுங்குகுழியிலிருந்து வெளி வந்தார்கள். உடலில் இருந்த மண்ணைத் தட்டிக்கொண்டார்கள். செல்லத்துரைப் பாட்டா மீண்டும் கூறினார்.

'இந்த மண் எமக்குச் சொந்தமில்லை என்றால், நாங்கள் பதுங்குவதற்கும் இடமில்லை.'

'கோப்பி குடிக்க வா அப்பு' என்று செல்லமணி அவரை அழைத்தாள்.

❊❊❊

# இலக்கியம் வேறு வாழ்க்கை வேறா?

இலக்கியப் படைப்பாளி என்பவன் தான் வெளிப்படுத்தும் கருத்துக்க ளுக்கு அமைவாக வாழ்க்கை நடத்த வேண்டுமா? இவ்வாறானஒரு கேள்வி எழுந்த தன் விளைவாகத் தோன்றியதே இந்தக் கட்டுரையின் தோற்றமாகும்.

தான் வெளிப்படுத்தும் கருத்துக்கள் சிறந்தனவாகவும், காலங்கடந்தும் நிலைத்து நிற்க வேண்டுமாயின் தான் வெளிப்படுத்திய, வெளிப்படுத்தும் கருத்துக்களுக்கு அமைவாக படைப்பாளி வாழ்க்கை நடத்தியே ஆக வேண்டும்.

இந்த பதிலுக்கு ஆதாரமான கருத்துக்கள் இலக்கிய உலகில் நிறையவே காணப்படுகின்றன.

காலத்தின் தேவையுணர்ந்து காலத்திற்கேற்ப கருத்துக்களைக் கூறி எக்காலத்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் படைப்புக்களை பொதுவாக சிறந்த படைப்புக்கள் என வரையறை செய்து கொள்வார்கள்.



முக்காலத்தையும் உணர்ந்து திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் எந்தக் காலமும் வாழ்ந்து கொண்டிருக்கும் இலக்கியமாகும். திருக்குறளில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் மேற்படி பதிலுக்கு ஆதாரமாக அமைவதை முதலில் காண்போம்.

*'நிறைமொழி மாந்தர் தம் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்'*
*'தக்கார் தகவிலார் என்பது அவரவர்*
*எச்சத்தாற் காணப்படும்'*

போன்ற திருக்குறள்களை நோக்குகின்றபோது தாம் வெளிப்படுத்திய கருத்துக்களைக் கொண்டு படைப்பாளியை இனங்காண்கிற தன்மையை உணரமுடிகிறது.

மறை மொழி என்பதும், எச்சம் என்பதும் இந்த இடத்தில் இலக்கியப் படைப்புக்குறித்து நிற்கின்றது என்று கருதுவோம். படைப்பாளி தான் வெளிப்படுத்திய படைப்பு என்பனவற்றோடு இவை ஒன்றிணைவதனை உற்று நோக்குகின்ற போது புலனாகும்.

திருவள்ளுவருக்கும் பல ஆண்டுகளுக்குப் பின்னே தோன்றிய புரட்சிக் கவிஞர் பாரதியார் பாடல்களில் இந்தக் கருத்து பொதிந்துள்ள தன்மையை அடுத்து நோக்குவோம்.

*உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினில் ஒளியுண்டாம்* என்கின்றார் பாரதியார். நல்லதைச் செய்ய வேண்டும், நல்லதை நினைக்க வேண்டும் என்கிற நினைப்பு உள்ளத்தில் தோன்றும் போது படைப்பாளி வெளிப்படுத்தும் கருத்துக்களும் நினைப்புக்கேற்பவே அமைந்து விடும் என்பதை இந்த வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

*அகத்தின் அழகு முகத்திற் தெரியும்* என்னும் புழமொழியின் கருத்தையும் இங்கே இணைத்துக் கொள்ளலாம்.

வாழ்வு வேறு இலக்கியம் வேறு அல்ல. வாழ்வும் இலக்கியமும் ஒன்று பட்டதாகவே என்றும் இருக்கவேண்டும். அவ்வாறான இலக்கியங்களே என்றும் இருக்கவேண்டும். அவ்வாறான இலக்கியங்களே என்றும் நிலைத்து நிற்கும் இலக்கியங்களாக அமையும் வாழ்கையும், இலக்கியத்தையும் பிரித்துப் பார்க்கின்ற –வாழ்வு வேறு இலக்கியம் வேறு என்று வேறுபடுத்திப் பார்க்கின்ற இரட்டை வாழ்வு என்னிடம் கிடையாது என்று 'பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்' நூலின் முன்னுரையில் கவிஞர் புதுவை இரத்தினதுரை கூறும் கருத்து இங்கே நோக்கப்படவேண்டியது அவசியமாகும்.

தன்னுடைய வாழ்க்கையை தான் வெளிப்படுத்திய கருத்துக்களுக்கு அமைவாக வாழாமல், வாழ்க்கை வேறு இலக்கியம் வேறு என்று வாழ்பவர்களை இரட்டை வாழ்வு வாழ்பவர்கள் என்கிறார் புதுவை இரத்தினதுரை.

இவ்வாறான இலக்கியப் படைப்பாளியின் படைப்புகள் சாகா வரம் பெற்றவையாகவோ சிறந்த இலக்கியமாக நின்று நிலைப்பனவாகவோ விளங்காது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

உள்ளொன்று வைத்தும் புறமொன்று பேசுவார், உறவு கலவாமை வேண்டும் என்ற வரிகளை இங்கே நெஞ்சில் இருத்தி கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற போது அந்தக் கருத்துக்களுக்கு இசைவாக வாழுகின்ற சொல்லிலும் செயலிலும் ஒன்றாகும். தன்மையை எங்கும் பரவச் செய்வோம்.

– ந.நகுலன்.

# அன்புக்கும் அறிவுக்கும் 'நந்தி'

என்னும் எழுத்தும், சொல்லும் செயலில் வாழ்ந்த பெருமை நந்தி அவர்களை சேருகிறது. நோயாளர்களுக்கு மருத்துவராகவும், இலக்கிய ஆர்வலர்களுக்கு சிறுகதை எழுத்தாளராகவும், மாணவர்களுக்கு பேராசிரியராகவும் வாழ்ந்தவர். வி.செ.சிவஞானசுந்தரம் ஆவார்.


இந்திய மேதை ராஜாஜி அவர்களால் சூட்டப் பெற்ற பெயர்தான் 'நந்தி'. முதலாவது சிறுகதை 1947 இல் 'சஞ்சலமும் சந்தோஷமும்' என்ற தலைப்பில் விரகேசரி பத்திரிகையில் வெளிவந்தது. 'ஊர்நம்புமா', 'கண்களிற்கு அப்பால்' போன்ற சிறுகதைத் தொகுதிகளையும் எழுதியுள்ளார். 'மலைக்கொழுந்து' என்ற நாவலினை எழுதி. இலங்கை, சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றவர். மருத்துவத்துக்கு பயன்பட அருமைத்தங்கை என்ற நூலினையும், சிறுவர்களுக்கு 'உங்களைப் பற்றி' என்ற நூலினையும் எழுதியவர். 'ஊர் நம்புமா', 'கண்களுக்கு அப்பால்' போன்ற சிறுகதைத் தொகுதிகளையும் எழுதியுள்ளார்.

பண்பிலும், செயலிலும் அவர் வடிவம், நடமாடும் உருவம், பல்கலைக்கழகத்தின் மூலை முடுக்கெங்கும் எல்லோரின் உருவத்தில் சேர்ந்து நின்று வழிகாட்டி, நல்ல பாதையில் தள்ளி விடுகின்ற பெருமையில் இனிமேலும் வாழ்வார்.

மாணவர்களுக்குக் குருவாக, இரவுச் சூட்டில் விளக்கப்பட்ட எத்தனையோ மின் விளக்குகள் இருந்தும் மங்கலான வெளிச்சம் பரவும் அறைக் குள் மறையவிடாத வாழ்வில் விம்பங்களில் தரையில் இருந்தும் அவர் எழும்பும் எங்களின் உருவத்தில் நிழல்பட்டு பயன்படப் போகின்ற போது இனிமேல் வீணாகிப் போகமாட்டோம்.

அறிவுக்கு வித்திட்டு, மதிப்பிட்டதில் கூடுதலான அளவும், தரப்படி மதிப்பெண்ணாக பிரிக்க முடியாத பரீட்சைகளில் முதலிடம் தான். நீங்கள் எப்போதுமே பின்தங்கி[illegible]நில்லையென்று தன்னைவிட மாணவர்களை [illegible]யர்வாகப் பார்க்கின்ற வாய்ப்பு கிடைத்ததென்று பயின்ற மாணவர்கள் சொல்லும் போது வியந்திருக்கின்றேன்.

விண்மீன்கள் மிளிர்கின்ற அண்ட வான வெளியில் நிலவின் அழகும் இருளான போதுதான்




அவதரிக்கின்றது. படர்ந்து திரை நீங்கி நீல மேகமானதும், மறைத்து முகில் வெள்ளை - கறுப்பு வானமானதும்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உருவமாக முகில் கூட்டங்கள் தனித்து நின்று சவாரி செய்கின்ற போதும் குறிப்பிட்ட நேரத்தில் களைவதும், வேறோர் உருவம் கொண்டு மையங்கொள்வதும் பரந்த வானமானபோதுதான் முடிகிறது. நந்தியின் வாழ்வில் தெரிகிறது.

முடிவிடமில்லாத வானத்தில் விரைவில் ஒன்று சேர்ந்து, பின்பு பிரிகின்ற முகில் கூட்டங்கள் வாழ்கிறது. கறுப்பு சூழ்ந்த போதுதான் மழைவந்து ஆனந்தப்படுத்துகிறது என்று யாருமே நினைப்பதில்லை. அந்த வானத்தில் தூரல் என்றாலும், அடைமழை என்றாலும் வானத்தை நனைக்குமா? நந்தியின் இரண்டுவிதமான ஆற்றலும் எல்லோரையும் காயாது நனைத்து விட்டுக் கொண்டிருக்கிறது.

செல்வா

# நூல் அகம்




| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும். (கவிதைத் தொகுப்பு) |
| எழுதியவர் | - | கவிஞர் புதுவை இரத்தினதுரை |
| வெளியீடு | - | நங்கூரம் பதிப்பகம் |
| விலை | - | 550/= |

வெளிச்சம் ,மல்லிகை சஞ்சிகையிலும் மற்றும் தினசரிப் பத்திரிகைகளான ஈழநாதம், ஈழநாடு ,உதயன், சுடர் ஒளி போன்றவற்றிலும், வாரப் பத்திரிகையான வெள்ளி நாதத்திலும் வெளிவந்த புதுவை இரத்தினதுரையின் கவிதைகளை , பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் என்ற தலைப்பில் 431 பக்கங்களில் தொகுத்து நங்கூரம் வெளியிட்டிருக்கிறது.

சூடு பட்ட இடம் சிவந்து, கறுத்து வித்தியாசமாக எமது உடலில் அடையாளப்பட்டுக் கிடக்கிறது போல, கவிதைகள் வித்தியாசமாக விடுதலைப் போரின் களப் பக்கத்தினையும், அதனூடான வாழ்வின் இழப்பையும், மீட்பையும், அதன் பெறுமதியையும் ஊரோடு ஒட்டி வாழ்கிற போது தான் கவிஞரால் உணர்ந்திருக்கமுடிகிறது.

எமது நிலம் வளம் மிக்கது. பயனுள்ளது இன்று பறிக்கப்பட்டிருக்கிறது. மீட்க வேண்டும். அதன் அவசியத்தை பரிநாமப்படுத்தி கவிதைகளாக பரிமாறிக்கொள்கின்ற வரிகள் எமது தாய் மண் சுமந்திருக்கும் பாரத்தினை எல்லோராலும் அறியமுடிகிறது.

இறுக்கமான வரிகளாக இலகு நடையில் பாமரரும் படிக்கக்கூடிய விதத்தில் எளிமையான முறையில் கருத்துக்களை அடுத்தடுத்து விதைத்திருப்பதை பார்க்கின்ற போது மண் பற்றும், விடுதலைப் பற்றும் கூடவாகவே கவிஞரிடம் காணப்படுகின்றது.

களமுனையில் நின்று ஆயுத முனைக்கு எதிராக, பேனா முனையில் சுட்ட கவிஞர் என்ற பெயரினைப் பெற்ற அனைத்து பக்கங்களும் ஈழத்து வாழ்வினை ஒட்டியும், போரினை ஒட்டியும் நகர்ந்திருக்கிறது.

போர் மேகம் சூழ்ந்து இருளான ஊர்கள் இரத்தத்தில் குளித்தவேளை, உறவுகளின் அவலக் குரலின் சத்தத்தில் நடுங்கிக் கொண்ட போது காப்பாற்ற யாருமற்ற அநாதரவாக ஊரெங்கும் இடம் பெயர்ந்து வாழ்ந்த வாழ்வு கவிஞரின் கவிதை வரிகளில் உயிர்பெற்று வலியும், வேதனையும், விடுதலையும் உணரப்பட்டு ஆழக்கடலில் தோணியில் பயணிக்கும் அதன் வலிமையை நன்கு உணரவிட்டிருக்கிறது. எமது மனதை உலரவிட்டிருக்கிறது.

தெருச்சந்தி, கோயில் குளம், குடிமனையென்று எமது ஊர் இன்று சோடனையிழந்து இருக்கிறதையும் கவிதைகளில் பார்க்க முடிகிறது. மீதி மூச்சில் உயிர் போக ஆயத்தமாகும் கடைசி சந்தர்ப்பத்திலும் இறுக்கப் பிடித்துக் கொண்டு வாழ்ந்தநாட்களை எண்ணிப் பார்க்க முடிகிறது.

எமது வளவில் தென்னை, பனை, கதவு, யன்னல், முற்றம், கிணற்றடி, வாசல், பூவசரம் வேலி என்று குந்தி இருந்ததையும் , நிலாச் சோறு உண்டதையும், கதைபேசி மகிழ்வுடன் வாழ்வு உருண்டதையும் ஒவ்வொன்றையும் அடையாளப்படுத்தி இருக்கிறது.

போரிற்குள் நனைந்தும், ஈரத்தாள்களில் அழியாமல் போன படிமங்களை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தூண்களாக நிறுத்தி கூட்டம் போலவும், தலை தெரிய உச்சிக்கு கொண்டு சென்ற கொடியைப் போலவும் ஒவ்வொரு கவிதைகளும் பட்டொளி வீசி தமிழுக்கும், தமிழர்களுக்கும் பெருமையாக்கி மானத் தமிழனின் இரத்த நாளத்தில் ஓடிக் கொண்டிருக்கிற கவிதை நூல் ஒன்றை இன்று பார்க்கிறேன்.

## வவுனியா மாவட்டத்தில்

# சட்ட விரோதமாக குடியமர்ந்தவர்களை வெளியேற்றக்கோரி வெகுஜனப் போராட்டம்

வவுனியா—

வவுனியா மாவட்டத்தில் உள்ள 13 குளங்களை அண்டிய பகுதிகளில் உள்ள காணிகளில் அனுமதியின்றி சட்டவிரோதமாக வீடுகளைக்கட்டி குடியமர்ந்துள்ளோரை வெளியேற்றாவிடில், வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்தப்போவதாக - கமக்கார அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

இந்தப் பகுதிகளில் 275 இற்கும் அதிகமானோர் சட்டவிரோதமான முறையில் வீடுகளைக் கட்டிக் குடியேறியுள்ளனர். இது தொடர்பாக் பல்வேறு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுப்பதாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டதைத் தவிர எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்தோர் விசனம் தெரிவித்தனர்.

இதேவேளை, குளங்களை அண்மித்து வீடுகள் கட்டப்படுவதை அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் கண்டுகொள்ளாமல் இருப்பதன் உள்நோக்கம் என்ன என்பது குறித்து சந்தேகம் எழுவதாகத் தெரிவித்த கமக்கார அமைப்புக்கள் குளங்களை அண்மித்துள்ளவர்களை வெளியேற்றக்கோரி வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகத் தெரிவித்தனர்.

# வடமராட்சி கிழக்கு பிரதேச வீதிகளை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு—

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் வீதிகள் அனைத்தும் சுனாமி கடல் அனர்த்தத்தால் மிகவும் மோசமாகச் சேதமடைந்து போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதிகளை புனரமைத்து இந்தப் பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கடல் தொழிலாளர் சங்கங்கள் என்பன சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை வீதிகளைத் திருத்துவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையெனப் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதி வர்த்தக நிலையங்கள் அனைத்தும் சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக முற்றாக அழிந்துள்ளன.

இந்த நிலையில் வர்த்தகர்கள் தமக்குத் தொண்டு நிறுவனங்கள் உதவவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்தவொரு தொண்டு நிறுவனமும் தமக்கு உதவவில்லையென கவலை தெரிவித்தனர்.

# கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் பூஜிதா ஞாபகார்த்த விளையாட்டுப்போட்டி

கிளிநொச்சி—

கிளிநொச்சி - கனகபுரம் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் போட்டிகளில் மென்பந்தாட்டப் போட்டி இன்று காலை 8 மணிக்கும், உதைப்பந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் பிற்பகல் 2 மணிக்கும் கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மென்பந்தாட்டப் போட்டியில் 17 அணிகளும், உதைபந்தாட்டப் போட்டியில் 13 அணிகளும் பங்குபற்றவுள்ளன. முதலாவது மென்பந்தாட்டப் போட்டியில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியும், கதிரவன் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. முதலாவது உதைபந்தாட்டப் போட்டியில் லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும், பிறைற்சன் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன.

தமிழீழ விளையாட்டுத்துறையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படவுள்ளன.

# லெப்டினன்ட் கேணல் அன்புவின் 7 ஆம் ஆண்டு நினைவு தினம்

லெப்டினன்ட் கேணல் அன்புவின் 7 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் - பொதுச் சுடரை தமிழீழ நிதித்துறை நிர்வாக செயலகப் பொறுப்பாளர் முகிலன் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அம்மா என்றழைக்கப்பட்ட லெப்டினன்ட் கேணல் அன்புவின் திருவுருவப் படத்துக்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் நினைவுரையை நிதித்துறை வணிக ஒன்றியப் பொறுப்பாளர் வெற்றியரசன் நிகழ்த்தினார். சிறப்புரையை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க. வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு கவிதை, நடனம், தமிழீழ இன்னிசை கானங்கள் உட்பட பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.



கல்மடுநகர் - சம்புக்குளம் சனசமூக நிலைய கட்டடத்தை கண்டாவளை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பத்மநாதன் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும், அருகில் கல்மடு நகர் கிராம சேவையாளர், அரசியற்துறையைச் சேர்ந்த இராமஜெயம், கல்மடு நகர் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் யோகநாதன், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.ஜெயமாலினி ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

படம்:- இராமநாதபுரம் செய்தியாளர்.

# கிராம அலுவலருக்கு பாராட்டு விழா

கிளிநொச்சி—

கிளிநொச்சி நகர்ப்பிரதேச கிராம அலுவலராகக் கடமையாற்றிய நா.செல்வரட்ணத்துக்கு பாராட்டு விழா நாளை மறுதினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி நகர்ப்பகுதி மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் க.சுலோஜினியும், சிறப்பு விருந்தினராக கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவர் கடந்த் பதினைந்து ஆண்டுகளாக கிளிநொச்சி நகரக் கிராம அலுவலராகக் கடமையாற்றி தற்போது ஆனந்தபுரம் பிரதேசத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

# நீர்த்தாங்கி திறந்து வைப்பு

கிளிநொச்சி—

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. 1996 ஆம் ஆண்டு சத்ஜெய படை நடவடிக்கைமூலம் கிளிநொச்சிப் பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த படையினரால் இந்த நீர்த்தாங்கி முற்றாகத் தகர்க்கப்பட்டது.

முற்றாக அழிக்கப்பட்ட நீர்த்தாங்கிக்கருகில், புதிதாக நீர்த்தாங்கி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இந்த நீர்த்தாங்கி விரைவில் திறந்து வைக்கப்பட்டு கிளிநொச்சி நகர மக்களுக்கான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜூன் - 13

கி.மு.323:- உலக மக்கள் அனைவரும் ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் வாழவேண்டும் என்று ஆசைப்பட்டவரும் அதற்காக ஒரு பெரிய சாம்ராஜ்ஜியத்தையே உருவாக்கினாலும் அரியணையில் இருந்து ஆட்சி செலுத்தக் கொடுத்துவைக்காதவருமான மாவீரர் மகா அலெக்ஸ்சாண்டர் தனது 32 ஆவது வயதில் மரணமானார்.

கி.பி.1774:- நோட்ஸ் தீவு அடிமைகள் இறக்குமதியைத் தடை செய்து சட்டம் நிறைவேற்றியது.

1914:- துருக்கிக்கும், கிறீசுக்குமிடையே ஏசியன் தீவுகள் பற்றிய உரிமைப் பிரச்சினை முறுகலாக மாறியது. கிரேக்கத் தலைவர் வெளிஸெலோஸ் துருக்கியின் கடற்கரை அருகே உள்ள இரண்டு பெரிய தீவுகளையும் கைப்பற்றிக்கொள்ளப்போவதாக அறிவித்தார்.

1917:- ஜேர்மனியின் டயமன்ட் விமானப் படையணியைச் சேர்ந்த இருபது விமானங்கள் லண்டன் நகர்மீது ஒரு நாளில் மட்டும் ஏறக்குறைய 4.5 தொன் குண்டுகளை வீசின. பலத்த சேதத்தை ஏற்படுத்திய இந்தத் தாக்குதலில் வீசப்பட்ட ஒரு குண்டு பொப்புலர் பாடசாலை அருகே விழுந்து வெடித்ததால் 46 குழந்தைகள் உடல் சிதறி மாண்டனர்.

1925:- அமெரிக்காவைச் சேர்ந்த ஃபிரான்ஸிஸ் இ.ஜென்சினால் குறுகிய எல்லைகளுக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்ட தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவை முதன்முதலாக ஒளிபரப்பப்பட்டது.

1938:- இரும்பு - நிக்கல் கலப்பு உலோகத்திலுள்ள முரண்பாடுகளைக் கண்டுபிடித்து பௌதீகவியலில் துல்லியமான அளவை முறைக்கு வழிகாட்டுவதற்காக பௌதீகவியலுக்கான நோபல் பரிசை வென்றவருமான சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த சார்ள்ஸ் எட்வேட் கெயில்லோம் மரணமானார்.

1940:- நேசப்படைகள் பாரிஸ் நகரத்தைவிட்டு முழுமையாக வெளியேறின. பிரான்சியப் படைகளும் லாயிர் என்ற இடத்துக்குப் பின்வாங்கின. இதனால் பாரிஸ் நகர் 'திறந்த நகராக' அறிவிக்கப்பட்டது.

1940:- அமெரிக்கா தன்னிடம் இருந்து மேலதிக ஆயுதங்கள் மற்றும் போர்த் தளபாடங்களை பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

1941:- பிரான்சில் ஆட்சியிலிருந்த ஜேர்மனியின் ஆசீர்வாதம் பெற்ற 'வீச்சி அரசு' பிரான்ஸ் - ஜேர்மனி ஒற்றுமையைச் சீர்குலைக்க சதி செய்ததாகக் கூறி 12000 இற்கும் மேற்பட்ட யூதர்களைக் கைதுசெய்து வதை முகாம்களில் அடைத்ததுடன் அவர்களது சொத்துக்களையும் அரசுடமையாக்கியது.

1942:- அமெரிக்க விமானப் படையினர் ரொமானியா எண்ணை வயல்களை குண்டுவீசித் தாக்கியழிக்க ஆரம்பித்தனர்.

1942:- அவுஸ்ரேலியாவின் டார்வின் துறைமுகம்மீது ஜப்பான் தாக்குதலை ஆரம்பித்தது.

1944:- ஜேர்மனி- கலெயிஸ் என்ற தளத்திலிருந்து ஏவுகணைத் தாக்குதலை ஆரம்பித்தது. இந்த ஏவுகணைகள் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து லண்டனிலும் வீழ்ந்து வெடித்தன.

1945:- அவுஸ்ரேலியப் படையினர் புரூனையை கைப்பற்றினர்.

1950:- தென்னாபிரிக்க பிரதமர் டானியல் மாலன் வெள்ளையர் குடியிருப்புப் பகுதி' வெள்ளையர் அல்லாதோர் குடியிருப்புப் பகுதி என்று நாட்டில் தனித்தனிப் பகுதிகளை உருவாக்கும் பிரிவினைச் சட்டத்தைக் கொண்டுவந்தார்.

1956:- 1954 ஆம் ஆண்டு பிரிட்டனும், எகிப்தும் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி கடந்த 74 வருடங்களுக்கு மேலாக சுயெஸ் கால்வாய் பகுதியில் முகாமிட்டிருந்த பிரிட்டிஷ் படைகள் முற்றாக வெளியேறின.

1971:- வியட்னாம் போரில் 1945 முதல் 1967 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அமெரிக்காவின் செயற்பாடுகள், இழப்புகள் பற்றிய மிக இரகசியமான இராணுவக் குறிப்புக்களை 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை 'பெண்டகன் பேப்பர்' என்ற தலைப்பில் வெளியிட ஆரம்பித்தது.

1972:- உட்புறக் காதில் நந்தை எலும்பு இயங்கும் விதத்தைக் கண்டுபிடித்ததற்காக 1961 ஆம் ஆண்டின் மருத்துவத் துறைக்கான நோபல் பரிசைப்பெற்ற அமெரிக்காவைச் சேர்ந்த ஜியார்ஸ் வான் பெக்கெசி காலமானார்.

1993:- உலகப் புகழ்பெற்றதும், உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவாக அமையக்கூடியதுமான ஒரு தீர்ப்பை அமெரிக்க உயர்நீதிமன்றம் வழங்கியது. அமெரிக்காவைச் சேர்ந்த மாநிலம் ஒன்று மத ம்,இனம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் குற்றங்களுக்கு மிகக் கடுமையான தண்டனை விதிக்க வழிசெய்யும் சட்டத்தை நிறைவேற்றியிருந்தது. இதனை எதிர்த்து உயர்நீதிமன்றில் வழங்குத் தொடர்ந்தபோது உயர்நீதிமன்றமும் மாநிலத்தினது சட்டத்தை ஆதரித்து உறுதிசெய்து தீர்ப்பை வழங்கியது.

1993:- இந்தியா பிரித்வீ ஏவுகணையை வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்த்தது.

⦸ ரஷ்யாவின் சுதந்திர தினம்

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.
திருக்குறள்

# நமது நோக்கு

## பேரினவாத மேலாதிக்கப் பிடிக்குள் சிக்கி தள்ளாடும் அரசும்,தடுமாறும் ஜனாதிபதியும்.

ஏற்கெனவே இந்தமாதம் 15 ஆம்திகதி நள்ளிரவுக்கு முன் பொதுக்கட்டமைப்புக் குறித்த தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி கைவிடவேண்டும் இல்லையேல், 16ஆம் திகதி ஜே.வி.பி அரசிலிருந்து விலகிக்கொள்ளும். அதாவது, அரசுக்கான தனது ஆதரவை விலக்கிக் கொள்ளும் என அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் அச்சுறுத்தலுடன் கூடிய அறிவிப்பொன்றை விடுத்துள்ளநிலையில், அந்தக் காலக்கெடுமுடிய இன்னும் மூன்று தினங்கள் மட்டுமே உள்ள சூழலில் ஜனாதிபதி தரப்பிலிருந்து வேறு ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

அதாவது, இம்மாத இறுதிக்குள் - 30 ஆம் திகதிக்குள் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திடும் நிலை உருவாகாதிருக்குமேயானால், ஜனாதிபதி தனது பதவியிலிருந்து விலகிக்கொள்ள முடிவெடித்துள்ளார் என்று அந்தச் செய்தி தெரிவிக்கின்றது.

இந்தச் செய்தியின் அடிப்படையில் பார்த்தால், ஜே.வி.பியினரின் காலக்கெடுவுக்கு முன் அவர்கள் எதிர்பார்க்கும் முடிவெதனையும் ஜனாதிபதி எடுக்கப்போவதில்லை என்ற விடயம் தெளிவாகின்றது.

அப்படியானால், சொன்னபடி 16 ஆம்திகதி ஜே.வி.பி ஆட்சியிலிருந்து விலகுமா என்ற கேள்வி எழவே செய்கிறது.

அப்படி அவர்கள் வாக்குத்தவறாத நேர்மையான அரசியல்வாதிகளாக இருப்பார்களேயானால், அதே 16 ஆம் திகதி ஜே.வி.பி யினரின் வெளியேற்றத்துடன் அரசாங்கமானது அறுதிப் பெரும்பான்மைப்பலத்தை இழந்த தொன்றாகிவிடும் என்பதுடன், ஆட்சியை வேறுவழியின்றி கலைக்கும் நிலையும் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுவிடும். இது தென்னிலங்கை அரசியலில் குழப்பமும், நெருக்கடியும் நிறைந்த ஒரு நிலையை உருவாக்குவதுடன் மீண்டும் ஒரு பொதுத்தேர்தலை எதிர்கொண்டேயாகவேண்டும் என்ற நிலைக்கு நாடு தள்ளப்பட்டுவிடும்.

அதேசமயம் இம்மாத இறுதிக்குள் பொதுக் கட்டமைப்பு உடன்பாட்டை ஏற்படுத்தும் சாத்தியம் இல்லையெனில், ஜனாதிபதி பதவி விலகும் தனது தற்போதைய எண்ணத்தைச் செயல்படுத்த முனைவாரேயானால் - இலங்கையரசியலில் ஏற்படப் போகும் புதிய நிலையின் தாககம் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுகுறித்த எதிர்வு கூறல் எதனையும் இப்போது கூறுதல் கடினமாகும்.

அரசு பதவி நீக்கப்படுவதோ, இழக்கப்படுவதோ மட்டுமல்லாது ஜனாதிபதி பதவியை துறப்பதென்பதும் இன்று எத்தகையதோர் குழப்பகரமானதும், நிச்சயமற்றதுமான அரசியல் சூழலில் நிகழப்போகின்றது என்பதை ஆழமாக யோசித்தல் வேண்டும்.

வெறுமனே ஒரு இயல்பான அரசியல் சூழலில் அறுதிப் பெரும்பான்மைப் பலமற்ற ஓர் அரசு - அதன் உள்முரண்பாடுகளால் ஆளும் கூட்டணி உடைந்து அரசு கவிழ்வதும், அதனையொட்டி புதிய அரசை தேர்வு செய்வதற்கான தேர்தல் ஒன்றை நடத்தவேண்டிய அவசியம் ஏற்படுவதும் இயல்பான விடயமேயாகும்.

ஆனால், இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசானது ஆரம்பம் முதலே முரண்பாடுகளின் மூட்டையாக இருந்து வந்துள்ளதுடன், சமாதானத்திற்கும், அமைதிப்பேச்சுக்களுக்கும் எதிரான பேரினவாத இலக்குகளுடன் செயற்படும் ஒன்றாகவே தன்னை இனங்காட்டி வந்துள்ளது என்பதும் எவராலும் நிராகரிக்க முடியாத ஒன்றேயாகும்.

இந்த அரசு ஆட்சிபீடம் ஏறி ஓராண்டுக்கும் மேலான காலம் கழிந்துள்ள நிலையில், சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் யாவும் கிடப்பில் போடப்பட்டுள்ளதுடன் -சுனாமிக்கு பின்னர் ஏற்பட்ட மாறுபட்ட சூழ்நிலையில் பொதுக்கட்டமைப்பு விவகாரம் சர்ச்சைக்குரிய பிரச்சினையாக்கப்பட்டுவிட்ட காரணத்தால்தான் இன்றைய அரசியல் நெருக்கடிநிலை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது எனலாம்.

பொதுக்கட்டமைப்பு விவகாரம் புலிகளுக்கு எதிரான ஒன்றாகமட்டுமின்றி, மிகவும் கீழ்த்தரமான அரசியல் நோக்கில் அதாவது, இனவாத நோக்கில் அதனை அணுகமுற்பட்டதே அது இன்றைய எரியும் பிரச்சினைகளின் விஷமூலமாகக் காரணமாகும்.

இன்றைய அரசியல் குழப்பங்கள் இயல்பாக ஏற்பட்ட ஒன்றேயல்ல, திட்டமிட்டு வேண்டுமென்றே உருவாக்கப் பட்டவைகளேயாகும்.


திருமலை புத்தர் சிலை விவகாரத்தில் - இனவெறித் தீவிரத்துடன் செயற்பட முனைந்த ஜே.வி.பியினரும், ஹெலஉறுமய பிக்குகளும் மற்றும் ஏனைய பேரினவாத சக்திகளும் மீண்டும் ஒரு இனக்கலவரத்தை உண்டு பண்ண அரசியல் ஆதாயம் காணும் நோக்குடன் அதனை விஸ்தாரமாக்கியதும், அதனுடன் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை இணைத்ததும் இன்றைய கொந்தளிப்பு நிலை உருவாகக் காரணமாகும்.

எனவே, இன்றைய தள்ளாடும் அரசும், தடுமாறும் ஜனாத பதியும் பேரினவாதத் தீக்கு தமது பதவிகளை இரையாக் கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதன் காரணமாக வரக்கூடும் என எதிர்பார்க்கப்படும் தேர்தல்கள் எந்த வகையிலும் ஜனநாயகத்தன்மையுடன் நிகழும் என எவராலும் நம்பவே முடியாது.

இந்த நிலையில் அடுத்துவரும் இருவாரங்கள் பேரினவாதத் தலைமைகளும், பௌத்தமதவாதத் தலைமைகளும் இலங்கையின் தலைவிதியை எப்படி நிர்ணயிக்கப் போகிறார்கள் என்பதைத் தீமானிக்கப் போகும் முக்கிய கால கட்டமாக இருக்கப்போகிறது என்றால் மிகையில்லை.

# நாடும் நடப்பும்

பாலைவனப் பயணம்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# எதற்கோ கூச்சலிடும் சர்வதேச சமூகம் இதைக் காணாதிருப்பது ஏனோ?

கடற்கோளால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களின் புனர்வாழ்வு புனரமைப்புக்கான பொதுக் கட்டமைப்பு இன்னும் உருப்பெறவில்லை. இதனால் சிக்கலான அரசியல் சூழ்நிலையே இலங்கையில் தோன்றியிருக்கிறது என்று இந்திய வெளியுறவுச்செயலர் சியாம் சரண் சொல்லியிருக்கிறார். சி வாரங்களுக்குமுன் இரண்டாவது தடவையாகவும் கொழும்புக்கு வந்து திரும்பிப் போகையில் விமானத்தில் பறந்தபடியே இதைச்சொன்ன இந்திய வெளியுறவுச் செயலர், இலங்கயைின் நிலைமைகளை இந்தியா தொடர்ந்தும் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என்று சொல்வதற்கும் மறக்கவில்லை என்று சொன்னார் நண்பர் பரமசிவம்.

எதைத்தான் எப்போதுதான் இந்தியா உன்னிப்பாகக் கவனிக்காமலிருந்து வந்தது? என்று நான் கேட்டேன்.

அதுக்குத்தான்அவர் சொல்லியிருக்கிறாரே தொடர்ந்து இந்தியா கவனித்து வருகிறதென்று இது போதாதா? போர் விமானங்கள் பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகளின் மீதும், கல்விக் கூடங்கள், மருத்துவ நிலையங்கள், தேவாலயங்கள், ஆலயங்கள், பள்ளிவாசல்கள் மீதும் குண்டு வீசித் தாக்கியபோதும் அகதிமுகாம்கள் மீதும் அகதிப்படகுகள் மீதும் குண்டுவீசித் தாக்கியபோதும், இந்தியாமிக உன்னிப்பாகத்தான் கவனித்து வந்தது என்று பரமசிவம் சொன்னார்.

போர் விமானங்கள் கண்மூடித் தனமாகப் பொது மக்கள் வாழும் பகுதிகளில் குண்டுவீசித் தாக்கிப் பொது மக்கள் கொல்லப்பட்டபோதும் தமிழ் மக்கள் உயிர் தப்புவதற்காகத் தமிழ் நாட்டை நோக்கி அகதிகளாகச் சென்றபோதும் இந்தியாவின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் கவலையும் கண்டனமும் தான் தெரிவித்தனர். குண்டு வீச்சு மோசமாகத் தொடர்ந்த போது ஆழ்ந்த கவலையும் கடும் கண்டனமும் தெரிவித்தனர். இதைத் தவிர இந்தியா என்ன செய்தது என்றேன்.

ஏன் செய்யவில்லை. மனிதாபிமான உதவியாக பீரங்கிப் படகை சிறிலங்கா அரசுக்கு வழங்கவில்லையா? என்று பரமசிவம் கேட்டார்.

இலங்கையின் நிலைமைகளை உன்னிப்பாகக் கவனிக்கிறோம். இலங்கையின் ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடு பாதுகாக்கப்படவேண்டுமென்பதில் இந்தியா அக்கறையாக இருக்கிறது என்ற வார்த்தைப் பிரயோகங்கள் இந்தியாவிலிருந்து பாடமாக்கப்பட்டது போலவரும் என்றேன்.

ஈராக்கில் அமெரிக்கா தலையிட்டு போர் புரிந்து அதிபர் சதாம் ஹுசைனை மறைவிடத்திலிருந்து கைது செய்து விசாரணைக்குட்படுத்தியபோதும் சரி அமெரிக்காவும் அதன் கையாட்களும் திட்டமிட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டாலும் ஈராக்கில் குண்டு வெடிப்புக்கள் ஓயுமா? அழிவுகள் நிறுத்தப்படுமா? என்று பரமசிவம் கேட்டார்.

என்ன திடீரென்று ஈராக் பக்கம் போய்விட்டீர் என்றேன்.

காரணமாகத்தான். அமெரிக்கா வியட்நாமில் படித்த பாடத்தை மறந்து ஈராக்கில் கால்வைத்தது. முன்பே சதாம் எச்சரித்திருந்ததை மறந்துவிட்டார்கள்! இப்பொழுது ஈராக்கில் குண்டுவெடிக்காத நாட்கள் எத்தனை; நாளாந்தம் மாண்டுபோகிறவர்களின் தொகை எவ்வளவு? என்று கேட்டார் பரமசிவம்.

குண்டுகள் வெடித்துக் கொண்டுதானிருக்கின்றன; உயிர்கள் பலியாகிக்கொண்டுதானிருக்கின்றனர். அமெரிக்கர்களும் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்றேன்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண்பதற்கு எந்த முயற்சியும் எடுப்பதற்கு சந்திரிகா அரசோ அல்லது இலங்கை அரசியல் தலைவர்களோ முயற்சி மேற்கொள்வதாகத் தெரியவில்லை. தன்னாதிக்க அதிகார சபை என்ற பேச்சைக்கூட இப்போது அவர்கள் மறந்துவிட்டார்கள். கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயக மக்களுக்கு புனர்வாழ்வும் புனரமைப்பும் வழங்குவதற்கு அதுவும் வெளிநாடுகள் கொடுத்தவற்றைப் பங்கிடக் கூடப் பெரும்பாடாக இருக்கிறது. இந்த நிலையில் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் என்றும் இல்லையென்றால் பாகிஸ்தான் கொடுக்கத் தயாராக இருக்கும் உதவிகளைப் பெறுவதற்கும் இலங்கை தயாராக இருக்கிறது. இந்தியாவிடம் ராடர் உதவிகளையும் பாகிஸ்தானிடம் விமானங்களையும், அமெரிக்காவிடம் வேறு உதவிகளையும் பெறுவதற்கு இலங்கை விரும்பலாம். ஆனால், ஈராக்கில் அமெரிக்கா அனுபவிப்பதைவிட இலங்கையில் தலையிட்டு தமிழ் மக்களுக்கு எதிராக நடந்துகொள்ளும் எந்த நாடும் அனுபவிக்கநேரிடும். இங்கு மட்டுமல்ல, தனது சொந்த நாட்டிலும்கூட நிம்மதியாக இருக்கமுடியாது என்பதை உணர்ந்து கொள்வது நல்லது என்றார் பரமசிவம்.

கடற்கோளினால் பாதிக்கப்பட்டு, வீடுவாசல்களையும் தொழில்களையும் இழந்த அல்லற்படும் மக்களுக்கு வெளிநாடுகள் இரங்கிக்கொடுத்த உதவிகளைக் கூடப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு புத்தமதத் தலைவர்கள் தடையாக இருக்கிறார்கள். இதைத் தட்டிக் கேட்கத் தைரியம் இல்லாத சர்வதேச சமூகமும், சர்வதேச மனித உரிமைக்ள அமைப்புக்களும் மற்றும் சிறுவர்களுக்காகவும் கூச்சலிடும் அமைப்புக்களும் புலிகள் சிறுவர்களைப் படைக்குத் திரட்டுகிறார்கள். விமானங்கள் வைத்திருக்கிறார்கள் என்றெல்லாம் இனிவாய் திறக்கக்கூடாது என்றேன்.

நம்மட சங்கரிகளும் அவர்களின்ரை சகபாடிகளும் தானே கிளிப் பிள்ளைகள்போல சொல்லிக் கொடுத்ததை மற்றவர்களுக்குச் சொல்லிக் காண்பிக்கினம். இராணுவப் புலனாய்வுத் துறைக்கும் நம்மட ஆட்களுக்குமுள்ள தொடர்புகளும், உறவுகளும் இப்ப நல்லாத் தெரியுதல்லோ? இவையள்தான் முந்தி தமிழீழம் காண ஆயுதம் ஏந்தியவர்கள் தங்களால எதையும் செய்யமுடியாவிட்டால்,எதிரிபக்கம் நின்று போராளிகளையே காட்டிக் கொடுக்கவேண்டும். புலிகள் மீது பழிபோடவேண்டும். பொதுமக்களுக்கு இவையளுடைய பொய்ப் பிரசாரம் விளங்கிவிட்டது. தமிழ் மக்கள் விடுதலை பெற்று தமிழர் தாயகத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கு யார் தடையா இருக்கிறார்களென்பதையும், இவர்களுடைய பொய்ப் பிரசாரப் புளுகுகளையும் மக்கள் புரிந்து உணர்ந்துவிட்டனர் என்று சொல்லிக் கொண்டு பரமசிவம் எழுந்தார்.

பௌத்தர்களின் புனித தலம் கண்டியிலுள்ள தலதா மாளிகை. இந்தத் தலத்தின் மீது முதலில் தாக்குதல் நடத்தியவர்கள் மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பியினர்தான். தலதா மாளிகையினுள் மற்றுமொரு துயர சம்பவத்தை ஏற்படுத்தவும் அவர்கள் மறைமுகமாகத் திட்டமிட்டனர். நல்லவேளை அந்தப் படித்த பிக்கு விழித்துக் கொண்டார்; தப்பிவிட்டார் என்று நின்றபடி சொன்னார் பரமசிவம்!

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் சாகும்வரை சாப்பிடாமல் கிடந்து சாவேன் என்று பட்டினி கிடந்த பிக்கு செத்துப் போனால் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்திக் குளிர் காயலாமென்று நினைத்துத்தான் ஜனாதிபதிக்கு ஜே.வி.பி. 15ஆம் திகதி வரை காலக்கெடு கொடுத்திருக்கவேண்டும். அவரின் உடல்நிலை நேற்றே மோசமடைந்திருப்பதாக அவரைப் பரிசோதனை செய்த மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர். இதன் பின்னரும் ஜே.வி.பி. 15ஆம் திகதி வரை காலக்கெடு கொடுத்திருந்தது. ஹெல உறுமய என்ற பிக்குகளின் கட்சியைச் சேர்ந்த பிக்கு தான் பட்டினி கிடந்து சாவதற்கு முன்வந்தார். இந்த முடிவுக்கு இவர்கள் வருவதற்கு ஜே.வி.பியின் கடும் போக்கே தூண்டுதலாக இருந்தது. உடல்நிலை மோசமான பிக்கு மேலும் 15ஆம் திகதிவரை பட்டினி கிடந்தால் என்ன நடக்கும்? இதற்குத்தான் ஜே.வி.பி. காலக்கெடு விதித்தது என்றேன் நான்.

அந்த பிக்குவுக்கு விடயம் விளங்கிவிட்டது. பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திடுவதற்கு முன் பிக்குகளிடம் காட்டுவதற்கு சந்திரிகா ஒப்புக்கொண்டிருப்பதால் பட்டினியை நிறுத்திச் சாப்பிட முடிவு செய்துவிட்டார்; தப்பிவிட்டார் என்று கூறிய பரமசிவம், மற்றொரு இனக் கலவரத்தைத் தூண்டிவிட முயற்சியாமே என்றார்.

விடுதலைப் புலிகளிடம் ஆயுதம்இருக்கும்வரை இனக் கலகத்தை யாரும் தூண்டிவிடமாட்டார்கள். இதற்காகத் தானே புலிகளை ஒழிக்கப் பாடுபடுகிறார்கள் என்றேன்.

பரமசிவம் போய்விட்டார்.

- தா.பாலகணேசன்

தெருக்கலைகள் ஊடாகவும் மக்களுடன் உரையாடுவதற்கான களங்கள் திறக்கப்படுகின்றன.

உரையாடலற்று நொருங்கிப் போகும் சூழல் மிக ஆபத்தானது.

கொடுத்தலும், வாங்கலுமற்ற தான நிலை உருவாகிறது. மன இறுக்கத்தில் மனிதர்கள் அகப்பட்டுக் கொள்கிறார்கள்.


நதிக்கரைகளின் ஓரங்களிலும், தெருவோரங்களிலும் ஓவியர்கள் நின்றுகொண்டு ஓவியம் தீட்டுவதை மக்கள் கூட்டமாக நின்று பார்த்து ரசிப்பதைக் கண்டிருக்கிறோம், காண்கிறோம். ஆபிரிக்கர்கள் எமது பறை போன்ற வாத்தியக் கருவியை இசைத்துக் கொண்டிருக்க அதன் விடயங்களும், அரசியல் சார விடயங்களும் வெளிப்பட்டு நிற்கும். இந்தத் தெருக்கலைகள் மகிழ்ச்சியை, ஒரு இன்பத்தை அளிப்பனவாகவும் விளங்குகின்றன. பிரான்சில் குறிப்பாக பத்தாம் நூற்றாண்டளவில் இந்தத் தெருக்கலைகள் பெரிய இடத்தைப் பிடித்திருந்தன. காலப் களே. வெளியில் நிலத்தை அரங்காகக் கொண்டு செயற்பட்ட இந்தக் கலைஞர்கள் முற்றிலும் வித்தியாசமான அரங்குகளைச் சந்திக்க நேர்ந்தது. மூன்று பக்கமும் சுவர்கள் எழுப்பிய மூடிய அரங்குக்குள் இந்த தெருவெளி நாடகக் கலைஞர்களின் நாடகங்கள் அரங்கேறியமைதான் லும் ஆர்வம் கொள்வாராயின் அவர் இந்த வீதி நாடகக் கலைஞர்களுடைய வாழ்க்கை வரலாற்றைக் கேட்கும் சந்தர்ப்பத்திலேயே அடிக் கீழ் நீரோட்டமாக ஒடும் இனவாத ஒடுக்கு முறையை உணர்ந்து கொள்ளலாம் என தமிழன்பன் அவர்கள் உரையாடலின்போது குறிப்பிட்

# மண்ணின் மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்திய மூடுண்ட அரங்கில் நிகழ்ந்த வீதி நாடகங்கள்

மன அழுத்தங்களாலும், துயரங்களாலும், இழப்புக்களாலும் அவன் உபாதைக்குள்ளாகிறான்.

இரண்டு மகா யுத்தங்களின் வடுக்களை சுமந்தவனாகவும் அவன் இருக்கிறான்.

அகதி வாழ்வின் ரேகைகள் அவன் முகத்தில் வீழ்கின்றன. இயந்திர மயமான வாழ்வியல் வேறு அவனது வாழ்வை மேலும் சிக்கலுக்குள்ளாகிறது. நகர்ந்து செல்லும் குடும்ப வாழ்வு, நுகர்வுக் கலாசாரம் போன்ற பல்வேறு விடயங்கள் அவனை ஒரு இறுக்கமான சூழ்நிலைக்குள் தள்ளி விடுகின்றன. இவற்றிலிருந்து அவனுக்கு விடுதலை அளிப்பவை



யாக கலைகளே விளங்கு கின்றன. தெருக்கலைகள் என்ற அம்சத்தின்கீழ் நாம் பிரான்சில் பல்வேறான கலை நிகழ்வுகளை குறிப்பிட்டுச் சொல்லாம். இன்னும் அவை மக்களோடு கொண்டிருக்கும் உறவுகள் குறித்து ஆச்சரியம் அடைந்திருக்கின்றோம்.

தாளக் கட்டுக்கேற்ப கலைஞர்கள் வீதியில் வேகமாக உருக் கொண்டவனைப் போல ஆடிக் கூத்திடுவதையும், வேலைப் பளுக்களுடன் வீடு திரும்பும் மக்கள் பார்த்து ரசிப்பதைப் பார்க்கலாம்.

சேர்க்கஸ்போன்ற வேடிக்கை நிகழ்வுகளும், குறுநாடக நிகழ்ச்சிக் காட்டுதல்களும், இசை வாத்தியங்களை இசைத்துக் கொண்டிருத்தலும், இசைத்துப் பாடுவதும், பொம்மைகளைக் கையில் வைத்துக் கொண்டு நிகழ்த்திக் காட்டுவதும், சுரங்க ரயில் வண்டிகளில் வெளித் தெரியா நாடகங்களை நிகழ்த்துவதும், கோமாளி வேசமிட்டுக் கொண்டு தெருவில் நின்று சிரிப்பு மூட்டுவதும், சுவரில் எழுதுவதும் போன்ற பல்வேறு தெருக்கலைகளை நாங்கள் இந்த ஐரோப்பிய தெருக்களில் காண்கின்றோம்.

இவற்றில் அரசியல் சார்ந்த போக்கில் அவை அருகிச் சென்று மகிழ்வூட்டலை மட்டும் பிரதான அம்சமாகக் கொண்டதாகவே தெருக்கலைகள் இருக்கின்றன என ஒரு சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இந்தக் கலைகளின் பெற்றோர்கள் யார் என்ற கேள்விக்கு விடை காண்பது சிக்கலானதாக இருந்து வருகிறது. தெருக் கலைகளில் இருந்தே வீதிநாடகம் தோன்றியதாகவும் அது வீதி நாடகம், வீதியிலநாடகம், வீதிக்குள் நாடகம் என்ற பிரிவுகளைக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. வீதி நாடகமானது அந்தக் காலத்திலிருந்து சமூக சீர்கேடுகளை விமர்சிப்பதாகவும், சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான பணியையும் ஆற்றியிருக்கிறது. பொதுமக்களோடு கூடிய இந்த நாடகவேலை அரங்குக்கு எதிரான சமூக செயற்பாடாகவும் இருந்திருக்கிறது. மக்கள் முன்னிலையில் நிகழ்த்தப்படும் இந்தவீதி நாடகத்துக்கு அதில் ஈடுபடும் கலைஞனுக்குள் ஏற்படும் ஆர்வம், தூண்டல், அக்கறை போன்ற விடயங்கள் பிரதான அம்சங்களாகத் தொழிற்படுகின்றன.

❑ ❑ ❑

எமது தெருவெளிக் கலைஞர்கள் பனி விழும் தேசங்களுக்கு பயணமாகினார்கள். அவர்களின் பயணமே ஒரு நாடக நிகழ்வாக அமைந்து நிற்கிறது. அவர்கள் குறிப்பாக ஐரோப்பா எங்கனும் நாடக அரங்குகளைத் திறந்து வைத்தார்கள். இவர்கள் தெருவெளி அரங்கச் செயற்பாட்டாளர்கள். தெருவெளியினூடே அரங்கம் கொண்டிருக்கும் தீவிரப் பண்புகள் குறித்து மிக அண்மைக்காலத்தில் அதிகம் உணர்ந்த கலைஞர்களுள் இவர்கள் முதன்மையானவர் அது .

விடுதலைப் பயணத்தோடு



சமகாலத்தில் பயணித்த இந்த அரங்கச் செயற்பாட்டாளர்கள் குறித்து எமக்குள் வியப்பும், ஆச்சரியமும், சந்தோசமும், மகிழ்வுமே ஏற்பட்டு விடுகிறது.

கலை கலைக்காகவா, கலை மக்களுக்காகவா என்கிற கேள்விகளை தம்முள் எழுப்பி கலை மக்களுக்காகவே என்கிற நோக்கில் அவர்கள் உழைக்கத் தொடங்கினார்கள். தெருவெளி நாடகத்தில் மிக முக்கியமானவராக்க கருதப்படும் பாதல் சர்க்கார் அவர்கள் குறிப்பிட்டது போன்ற மூன்றாவது நாடகம் என்ற கருத்தாக்கத்தை முன்வைத்து மேடையை நிராகரித்து மக்களிடையே முற்ற மேடை என அழைக்கப்படும் திறந்த வெளி நாடகங்களை உருவாக்கியவர்கள்.

சிங்கள பௌத்த பேரினவாதத்தினுடைய தமிழின ஒடுக்குமுறை பற்றி ஒருவர் அறிய முயடார்.

விடுதலை கோரி நின்ற மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் யாவும் துருத்திக் கொண்டு நிற்கும். மக்களோடு மக்களாக வாழ்ந்து எளிமைப்படுத்தப்பட்ட தெருவெளி அரங்கத்தைத் திறந்து சுவாசத்தை நிகழ்த்தியவர்கள் இவர்கள். அரங்க வரலாற்றில் பாவித்த அத்தனை பொருட்களும் கலைப்பொருட்களாக மிளிரத் தொடங்குகின்றன. அவற்றின் கலைப்பெறுமானமும் கூடிச் செல்கிறது. போற்றுதல், நன்றி உணர்வு, வரலாற்று அறிவு ,சமூகப் பொறுப்புணர்வு, மானுட நேயம் வாய்க்கப்பெறும் அனைவரும் இதை ஆழமாக உணர்வார்கள். ரயருக்குள் வைக்கல் அடையப்பட்ட ஸைக்கிள் ஒரு குறியீடாக நிற்கிறது என புதுவை அன்பன் அவர்கள் நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டமை கருத்தில் கொள்ளவேண்டும்.

(தொடரும்)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## மீனம்

உங்கள் ராசியில் ஏற்பட்ட கண்ட சனி விலகி, 5 ஆம் இடமான பூர்வ புண்ய ஸ்தானத்துக்கு சனிபகவான் பெயர்ச்சியாகின்றார். எனவே இந்தச் சனிப் பெயர்ச்சி, உங்களுக்கு நல்ல சாதகமான பலன்களையே கொடுக்கும். எதிர்பாராத வகையில் தன சேர்க்கை ஏற்பட்டு, சேமிப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தினரின் உடல் நிலை சம்பந்தமாக இருந்துவந்த மருத்துவச் செலவுகள் குறைய ஆரம்பிக்கும். அடிக்கடி பழுது ஏற்பட்டு தொல்லை பல கொடுத்துவந்த வாகனங்கள், இனி மேல் நன்றாக ஓட ஆரம்பிக்கும். வீடு, நிலம் போன்றவற்றில் இருந்துவந்த விரயங்கள் குறைந்து, லாபம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டாகும். உங்களின் பலம் கூடியதால், எதிரிகளின் தொல்லை குறையும். எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். புத்திரர்களால் வழியில் சந்தோஷம் ஏற்பட்டு, சுபச் செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் முன்னேற்றம் தென்படும்.

உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பணிகளில் கவனத்துடன் செயற்படவும். உங்களுக்கு மேலதிகாரிகளின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். என்றாலும் சில நேரங்களில் நீங்கள் பேசும் வார்த்தைகளால் முன்னேற்றம் அடைவதில் கால தாமதம் ஏற்படும். எனவே பேச்சில் எச்சரிக்கை தேவை. அதேநேரம் சிலருக்கு விரும்பியபடி இடமாற்றம் கிடைக்கும். சக ஊழியர்கள் நட்புடன் பழகுவார்கள். அவர்களின் ஆதரவைப்பெற்று, பெரும்பாலான காரியங்களைச் சாதித்துக்கொள்ளுங்கள். பண வசதி தாராளமாக இருப்பதால், வருங்காலத்துக்கான சேமிப்புகளில் கவனம் செலுத்தலாம்.

வியாபாரிகளுக்கு இது லாபகரமான பெயர்ச்சி. வியாபாரம் நன்றாகவே நடக்கும். மற்றபடி உங்கள் முயற்சிகளில் உறுதியமாக இருந்தால், எதிர்பார்த்த பலனை அடையலாம். உங்கள் பொருட்களை நன்றாக விளம்பரப்படுத்துங்கள். புதிய சந்தைகளில் அவற்றை விற்பதற்கு இடங்களைத் தேடுங்கள். தன்னம்பிக்கையுடன் செயற்படுங்கள். சிலர் இடமாற்றங்களைச் சந்திக்க நேரும். தொழில் ரீதியாக ஏற்பட்டிருக்கும் போட்டியைத் திறமையாகச் சமாளிக்கும் ஆற்றல் கூடி வரும். பூர்வீக வியாபாரம் செய்து வருபவர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். அதில் மேலும் முதலீடுகளைச் செய்து, அதிக முன்னேற்றம் அடையலாம்.

விவசாயிகளுக்கு லாபம் நன்றாகவே இருக்கும். போட்டது முளைக்கும்; அறுவடையில் கேட்டது கிடைக்கும்! பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் அமர்ந்த சனிபகவான் லாபஸ்தானத்தைப் பார்ப்பதால் இத்தகைய முன்னேற்றத்தைக் கொடுப்பார். அதேநேரம் எதிலும் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். வீணாக வரப்பு, வாய்க்கால் சண்டைகளில் இறங்கவேண்டாம். கால்நடைகளாலும் உங்களுக்கு லாபம் கிடைக்கும். புதிய வயல்களை வாங்கி விவசாயத்தை விரிவுபடுத் துவீர்கள். அதேசமயம். சில நேரங்களில் சரியான முடிவு எடுப்பதில் தடுமாறுவீர்கள். இந்த நேரங்களில் அனுபவஸ்தர்களின் ஆலோசனையைப் பெற்று நடக்கவும். சற்று விரயங்கள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளதால் வீண் செலவுகளைக் குறைத்து, சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும்.

அரசியல்வாதிகளுக்கு இது சாதகமான கால கட்டமாகும். குடத்துக்குள் இட்ட விளக்காக உங்களை "கண்டசனி" இன்றுவரை வைத்திருந்தார். தற்போது அது விலகிவிட்டதால் இனி உங்களின் புகழ் வெளிப்படும். நீங்கள் மேடையில் பேசினால் உங்கள் பேச்சை ரசிப்பதற்கு பெரும் கூட்டம் கூடும். பழைய கஷ்டங்களை எல்லாம் மறந்துவிட்டு சந்தோஷ நடை போடலாம். தங்களுக்கு உயர்ந்த பதவி காத்துக்கொண்டிருக்கிறது. அதே நேரம் தொண்டர்களை அலட்சியப் படுத்தாமல் ஆதரித்து, அரவணைத்துச் செல்லுங்கள். நீங்கள் கண்ட சனியில் இருந்தபோது அவர்கள்தானே தொடர்ந்து ஆதரவு தந்து, உங்களை அரணாக நின்று காப்பாற்றினார்கள்?

கலைத்துறையினருக்கு இது சிறப்புத் தரும் பெயர்ச்சி. எதிர்பார்த்த பாராட்டுகள் உங்களைத் தேடி வரும். அதே சமயம், நீங்கள் அதனால் நிதானம் இழக்காமல் தொடர்ந்து செயலாற்றுங்கள். உங்களின் கடமைகளைச் சரியாகச் செய்யுங்கள். சில கலைஞர்களுக்கு திடீரென்று பெரிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் அதிர்ஷ்டம் கிடைக்கும். ரசிகர்களின் ஆதரவு தொடர்ந்து கிடைத்துக்கொண்டே இருக்கும். சனிப்பெயர்ச்சிக்காலம் வளமாகவே அமையும்.

பெண்களுக்கு செல்வச் செழிப்போடு வாழக்கூடிய நிலைமை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். திருமணம் போன்ற சுபகாரியங்களை நடத்தி மகிழ்வீர்கள். குழந்தைகளால் சந்தோஷம் அடைவீர்கள். வேலைபார்க்கும் பெண்களுக்கு முற்போக்கான பலன்கள் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். எதிர்பார்த்த சம்பள உயர்வும் கிடைக்கும். சக தோழிகளின் ஆதரவு சிறப்பாக இருப்பதால் அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு முடிவுகளை எடுக்கவும். சில நேரங்களில் வேலைப்பளு அதிகமாக இருக்கும். அத்தகைய சமயங்களில் மற்றவர்களின் அறிவுரை உங்களுக்கு உதவியாக இருக்கும்.

மாணவர்கள் நல்ல மதிப்பெண்களை அள்ளுவீர்கள். கல்வியிலிருந்த மந்த நிலை விலகி, படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். எந்தப் பாடத்தையும் ஒரு முறை படித்தவுடனேயே புரிந்துகொள்ளும் கற்பூர புத்தி உண்டாகும். விளையாட்டுத் துறையில் ஈடுபடும் மாணவர்கள், விருதினையும், பாராட்டையும் பெறுவார்கள். எனினும். தொடர்ந்து வெற்றி பெற விடாமுயற்சியும், நம்பிக்கையும் உங்களுக்கு அவசியம்.

பரிகாரம் : சனிக்கிழமைகளில் சனீஸ்வரன் சந்நிதியில் எள் தீபம் ஏற்றி வழிபட்டு வரவும். ஊனமுற்றோருக்குத் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்யவும். மேலும் சனிக்கிழமைகளில் வெங்கடேஸ்வரர் வழிபாடு நல்ல பலனைக் கொடுக்கும்.

### இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில்

# சர்வதேசம் தொடர்ந்தும் மௌனம் சாதித்தால் மீண்டும் யுத்தம் மூள்வதை தடுக்க முடியாது!

### யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் எச்சரிக்கை

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து நீண்ட காலமாக இலங்கைத் தீவிலுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச சமூகம் மௌனம் சாதித்தால், மீண்டும் யுத்தம் மூழ்வதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் சர்வதேச சமூகத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றும் போர் நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வு கிட்டவில்லை.

புரிந்துணர்வு உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைக் கூட அமுல்படுத்த முடியவில்லை. இந்தச் செயலானது சிங்கள பௌத்த பேரினவாதிகளின் மேலாண்மை இருக்கும் வரை தமிழ் மக்களுக்கு நியாயபூர்வமான தீர்வு ஒன்றை சிங்கள ஆட்சியாளர்களால் கொடுக்க முடியாது என்பது தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

தனி நாட்டுக்காகப் போராடிய தமிழர்களுக்குத் தமிழீழம்தான் முடிந்த முடிவு. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதனால்தான் விடுதலைப் புலிகளால் தன்னாட்சி அதிகாரசபை முன்வைக்கப்பட்டது. இதனையும் சிங்கள அரசு வழங்க முன்வரவில்லை. இதற்கிடையே சுனாமி வந்தது. பொதுக்கட்டமைப்பை உருவாக்குவோம் என்றார்கள். ஆனாலும் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கக்கூடாது என்பதில் பேரினவாதிகள் உறுதியாக நிற்கிறார்கள்.

தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் புறந்தள்ளப்பட்டு, தமிழினத்தை அழிப்பதற்காக சிங்கள பௌத்த பேரினவாதிகளும், ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய போன்ற கட்சிகளும் முனைப்பான அராஜக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது முழு இலங்கையையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

தமிழரின் அரசியல் உரிமைக்குத் தடை போடும் சிங்கள பௌத்த பேரினவாதம் - அவசர மனிதாபிமானப் பணிகளுக்குக்கூட முட்டுக்கட்டை போடுகின்றது. இதனால் யுத்த அனர்த்தத்துக்குள் சிக்கித் தவிக்கும் தமிழ் மக்களுக்கு இயல்புவாழ்வு இல்லை. உடனடி மனிதாபிமான உதவிகளும் இல்லை. இன்னும் எத்தனை நாட்களுக்குப் பொறுமை காப்பது. பொறுமை காத்தாலும் ஏதேனும் பயன் கிடைக்குமா? சர்வதேச சமூகம் தான் இதற்குப் பதில்சொல்லவேண்டும்.

தமிழ் மக்களின் பொறுமைக்கு இனி ஏது எல்லை? பொறுத்தது போதும் பொங்கியெழு தலைவா! என போர்க் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர். வடக்கே - நெடுந்தீவில் இருந்து கிழக்கே குமன வரை இச் சத்தம் கேட்கிறது. தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற சக்தி தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு மட்டுமே உள்ளது என்பது தமிழ் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

சர்வதேச நாடுகளின் தலைவர்கள் எமது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஏதுவாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். மாறாக, சர்வதேச சமூகம் மௌனம் சாதிக்குமேயானால் மீண்டும் ஒரு யுத்தம் மூள்வதைத் தடுத்து நிறுத்த முடியாது போய்விடும்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று வழிநடத்தும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தமிழ் மக்களின் இழந்த இறைமையை மீட்டெடுப்பதற்கான தீர்க்கமான முடிவினை எடுக்கும் நேரம் நெருங்கிவிட்டதாக தமிழ் மக்களாகிய நாங்கள் கருதுகின்றோம்.

இந்த நெருக்கடியான சூழலை சர்வதேச சமூகம் நன்கு புரிந்து கொள்ள வேண் டும். தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கின்ற அடுத்த கட்ட வரலாற்று நகர்வை நாங்கள் முன்னெடுக்க சர்வதேச நாடுகள் எமது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டுமென அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமாதானக் கதவை நிரந்தரமாக மூட சிங்கள பேரினவாதம் முயல்கின்றது!

### யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அவசியமான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக்கூட தயாரில்லாத சிங்கள பௌத்தபேரினவாதம் - தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு முன்வருமென சுயசிந்தனையுடைய எவரும் இனிமேலும் கருதமுடியாது என, யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அரசும் அதில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியும் பௌத்த குருமாரின் ஹெலஉறுமய போன்ற அமைப்புகளும் தமிழ் மக்களின் இருப்பை இல்லாதொழிக்க கையாளும் தந்திரோபாயங்கள்தான் வேறுபடுகின்றன.

தான் மிகுந்த அழுத்தத்தில் இருப்பதாகவும் அதற்கு மத்தியிலும் பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயாராகி வருவதாகவும், ஜனாதிபதி கூறுவது காலத்தை இழுத்தடிக்கும் வஞ்சக நோக்குக் கொண்ட தந்திரோபாயமாகும். இந்தக் கால இழுத்தடிப்பு சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு மேலும் வலுச்சேர்ப்பதற்கானதாகும்.

தமிழ் மக்களுக்குள்ள அடிப்படை மனிதஉரிமைகளைப் புறந்தள்ளி துவம்சம் செய்வதற்காக முனைப்புடன் சிங்கள பௌத்த பேரினவாதம் கடந்த சில நாட்களாக அராஜக செயற்பாடுகளில் தீவிரமாக இறங்கியுள்ளது.

இந்தத் தருணத்தில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தமிழ் மக்களின் இழந்த இறைமையை மீட்டெடுப்பதற்கான தீர்க்கமான முடிவை எடுக்கும் காலம் வந்துவிட்டது என, தமிழ் மக்களாகிய நாம் கருதுகின்றோம்.

தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கின்ற அடுத்த கட்ட வரலாற்று நகர்விற்கு தமிழ் மக்கள் தயாராகிவிட்டார்கள் என்பதை சர்வ தேசம் புரிந்து கொள்ளவேண்டும்.

எனவே, தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வுரிமையைப் பேணுவதற்கான தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டு அரசாங்கத்தின் மீது பொருத்தமான அழுத்தங்களை பிரயோகிப்பதன் மூலம் சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் கௌரவத்தையும் சுதந்திரத்தையும் உறுதி செய்வதற்கான செயற் பாடுகளை மேற்கொள்ளுமென நாம் எதிர்பார்க்கின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சிங்கள தேசம்

# தமிழரை இனியும் ஏமாற்ற நினைத்தால் மோசமான விளைவுகளைச் சந்திக்கும்!

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம்

பொறுமையின் எல்லையில் தமது உரிமைகளுக்காகக் காத்திருக்கும் தமிழர்களை இனியும் நீண்ட காலத்துக்கு இழுத்தடித்து ஏமாற்றும் நாடகங்களை அரசு அரங்கேற்ற நினைத்தால் சிங்கள தேசம் மோசமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டியேற்படும் என யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சிங்கள பேரினவாத சக்திகள் தமிழ் மக்களுக்கு எந்தவகையான உரிமைகளையும் வழங்கக்கூடாது என்பதில் முனைப்பாகச் செயற்படுகின்றன என்பதை இன்றைய அரசியல் கள நிலைவரம் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

பொதுக்கட்டமைப்பைக்கூட தமிழ் மக்களுடன் இணைந்து மேற்கொள்ளக்கூடாது என்பதை அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டிருக்கும் இனவாதக் கட்சியான ஜே.வி.பியினதும், மத வெறிபிடித்த பிக்குமாரின் சிஹல உறுமயக் கட்சியினதும் போக்கு தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

தந்தை செல்வா தொடக்கம் பல்வேறு தமிழ்த் தலைவர்கள் தமிழர்களின் உரிமைகளைக் கேட்ட வேளைகளில் எவ்வாறு அதனைத் தட்டிக் கழித்ததோ அவ்வாறே பேரினவாத அரசு இழுத்தடித்துக் கொண்டு ஏமாற்று வித்தைகளைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

ஆனால், இன்று தமிழர்கள், தமது ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து உரிமையைக் கேட்டு நிற்கிறார்கள். எனவே, இனியும் சிங்கள தேசம் தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுக்க இழுத்தடிக்குமாக இருந்தால், பிரிந்துசென்று தனிநாடு அமைப்பது ஒன்றுதான் ஒரேவழி என்பதனை சிங்கள தேசம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழர்களுக்கு அரசியல் ரீதியாக தீர்வினைக் கொடுப்பதற்கு சிங்கள அரசியல் கட்சிகள் தடையாக இருக்குமானால், மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதற்கு அவையே காரணமாக இருக்கும் என்பதை சர்வதேச நாடுகள் புரிந்துகொள்ளவேண்டும். ஜனாதிபதி முன்னெடுக்கப்போகும் அடுத்த கட்ட நடவடிக்கையே தமிழர்கள் தமது உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான அடுத்தகட்ட நகர்வினை நிர்ணயிக்கும்.

பொறுமையின் எல்லையில் தமது உரிமைகளுக்காகக் காத்து நிற்கும் தமிழர்களை இனியும் பல இழுத்தடிப்புக்களை மேற்கொண்டு ஏமாற்று நாடகங்களை அரசு அரங்கேற்ற நினைக்குமானால், மோசமான விளைவுகளை சிங்கள தேசம் எதிர்நோக்க வேண்டியேற்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சீனாவின் தென்மேற்குப் பகுதியில்

# பலத்தமழையில் கிராமங்கள் மூழ்கின பாரிய உயிர் மற்றும் உடைமை இழப்பு!

பீஜிங்

சீனாவில் தென்மேற்குப் பகுதியில் கடந்த சில நாட்களாகவே பலத்த மழை பெய்து வருகிறது. ஆறுகள் பெருக்கெடுத்ததில் ஏராளமான கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஆயிரக்கணக்கான வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. பயிர் நிலங்களும் மூழ்கின. பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவுக்கு ஏற்கனவே 230 பேர் பலியாகிவிட்டனர். தொடர்ந்து அங்கு பலத்த மழை பெய்து வருகிறது. தெற்குப் பகுதியில் உள்ள கிராமத்தில் பாடசாலையொன்றை வெள்ளம் அடித்துச் சென்றது. அந்தப் பாடசாலையில் இருந்த மாணவர்கள் 64 பேர் நீரில் மூழ்கிப் பலியாகினர். வெள்ளத்தில் சிக்கிய ஏனைய மாணவர்கள் தப்பி விட்டனர்.

பலியான மாணவர்களின் உடல்களை மீட்க இராணுவத்தினரும், மீட்புப் படையினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு ஹெலிகொப்டர்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டு வருகின்றன.

உலக நோக்கு

# எகிப்தில் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் பாடசாலை மாணவர் உட்பட 17பேர் பலி!


எகிப்து நாட்டின் அலெக்சாண்டிரியா நகரில் அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடம் இடிந்து அருகிலுள்ள பாடசாலைக் கட்டடம் மீது விழுந்ததில், பாடசாலை மாணவர்கள் உட்பட 17 பேர் உயிரிழந்ததுடன் 20 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இந்த இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இதுவரை இடிபாடுகளிலிருந்து 16 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அந்தக் குடியிருப்பில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மாடிக் கட்டடங்களைவிட மேலதிகமாக மூன்று மாடிகளை கட்டட உரிமையாளர் அனுமதியின்றிக் கட்டியதே இந்த விபத்துக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

### ஈராக்கில்

# ஐந்து மாதங்களுக்கு முன் கடத்தப்பட்ட பிரான்ஸ் பெண் செய்தியாளர் விடுதலை!



பாக்தாத்

ஈராக்கில் 5 மாதங்களுக்கு முன்னர் கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட பிரான்ஸ் செய்தியாளர் புளோரன்ஸ் ஒபெனஸ் மற்றும் அவரது ஈராக்கிய மொழி பெயர்ப்பாளர் ஹிசைன் அல்-சாதி இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட புளோரன்ஸ் நல்ல தேகாரோக்கியத்துடன் இருப்பதாக அவர் பணியாற்றும் செய்திப் பத்திரிகையான 'விடுதலை' தெரிவித்தது. இவர் நேற்றைய தினம் பிரான்ஸை வந்தடைந்தாரென பிரான்ஸ் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இருவரும் விடுதலை செய்யப்பட்டது எவ்வாறு என்பது தொடர்பான எவ்வித தகவலும் வெளிவரவில்லை. இவர்களது விடுதலைக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டதென்ற செய்தியைப் பிரான்ஸ் அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

கடந்த ஜனவரி 5 ஆம் திகதி கடத்தப்பட்ட . இவர்களை விடுவிப்பதற்குப் புளோரன்ஸ் பணியாற்றும் பத்திரிகை தன்னாலான முழு முயற்சியையும் மேற்கொண்டிருந்தது.

இவர்கள் கடத்தப்பட்ட பின்னர் கிளர்ச்சிவாதிகளால் வெளியிடப்பட்ட வீடியோ ஒளிநாடாவில் - தனது விடுதலைக்கு உதவுமாறு பிரான்ஸ் அரசாங்கத்தை புளோரன்ஸ் உருக்கமான முறையில் கோரியிருந்தார்.


விடுதலை பத்திரிகையில் 18 வருடகாலமாகப் பணியாற்றி வரும் புளோரன்ஸ் உலகில் இடம்பெறும் சம்பவங்களை உடனுக்குடன் பத்திரிகையூடாக வழங்கிவந்தார்.

கடந்த வருடமும் ஜோர்ஜியாஸ் மல்புறூநொட் மற்றும் கிறிஸ்ரியன் செஸ்நொட் என்ற இரண்டு பிரான்ஸ் செய்தியாளர்கள் கடத்தப்பட்டு கடந்த டிசெம்பர் மாதம் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கைக்கு இராணுவ உதவி தமிழர்களுக்கு ஆறாத ரணம்!

## இந்தியப் பிரதமருக்கு வைகோ. கடிதம்



இலங்கைக்கு இந்திய அரசு இராணுவ உதவி அளித்தால் அது தமிழ்நாடு மற்றும் தமிழீழத் தமிழர்களுக்கு ஆறாத ரணமாகவே இருக்கும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வைகோ கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் வைகோ கூறியுள்ளதாவது -

கடந்த ஜூன் நான்காம்திகதி தங்களைச் சந்தித்தபோது இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படாது என்று தாங்கள் உறுதி அளித்தபோது நான் நிம்மதி அடைந்தேன். ஆனால், கடந்த ஜூன் 10ஆம் திகதி கொழும்பில் செய்தியாளர்கள் சந்திப்பின் போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங்- உத்தேசிக்கப்பட்டுள்ள இந்திய-இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் இறுதி வடிவம் பெறுவதற்கான பணிகள் நடைபெறுகிறது என்று கூறியதை அறிந்து மிகுந்த அதிர்ச்சிக்குள்ளானேன்.

கொழும்பு நகருக்கும் இலங்கை அரசின் இராணுவ நிலைகளுக்கும் வான் வெளிப்பாதுகாப்புக்காக இந்தியா ராடர் சாதனத்தை வழங்க முன்வந்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

1995 - 1998 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தின் மீதும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளிலும் இலங்கை அரசு நடத்திய விமானத் தாக்குதல்களில் , குண்டுவீச்சில் ஏராளமான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

இன்று தமிழர் உள்ளத்தில் விஸ்வரூபம் எடுத்துள்ள கேள்வி இதுதான் இலங்கை விமானப் படை தமிழர்கள் பகுதிகளிலேயே இனி விமானத்தாக்குதல்" நடத்துமானால் தமிழர்களைப் பாதுகாக்க இந்திய அரசு அதைத்தடுக்கின்ற அரண் ஏதாவது ஏற்படுத்தப்போகிறதா என்பதுதான்

இரு நாடுகள் ஒத்துழைப்பு என்ற பெயரால் இலங்கைக்கு எந்த இராணுவத் தளபாடத்தையும் இந்தியா கொடுக்ககூடாது. அவ்விதம் இராணுவ உதவியை இலங்கை அரசுக்கு இந்தியா செய்யுமானால்- இலங்கைத் தீவில் மட்டுமல்ல இங்கு வாழும் தமிழர்களின் இதயங்களிலும் ஆறவே முடியாத ரணமும் காயங்களும் ஏற்பட்டு விடும்.

இந்தப்பிரச்சினையினுடைய கடுமையையும், தமிழர்களின் உணர்வுகளையும் நிச்சயம் தாங்கள் மதிப்பீர்கள் என்றும் அதனால் இலங்கையுடனான ஒப்பந்தத்தை இந்தியா செய்து கொள்ளாது என்றும் இன்னமும் நான் நம்பிக்கையோடு இருக்கிறேன் என்று அதில் கூறியுள்ளார்.

## பெண்மீது பலாத்கார முயற்சி 3 கடற்படை அதிகாரிகள் கைது!

தனது கணவருடனும் உறவினர்களுடனும் காலிமுகத்திடலுக்குச் சென்ற 19 வயதுப் பெண்மீது பலாத்காரம் புரியமுயன்ற குற்றச்சாட்டின்கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட கடற்படை அதிகாரிகள் மூவரை எதிர்வரும் 17 ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சரத்கருனாரட்ண உத்தரவிட்டுள்ளார்.

பிரதிவாதிகள் சமர்ப்பித்த பிணை மனுவை ஏற்றுக்கொள்ள நீதிவான் மறுத்துள்ளார். தடுப்புக்காவலில் கடற்படை அதிகாரி களான ரவீந்திர ஜெயதிலக, ஆர்.எம்.வசந்தரட்ணாயக்க, விஜயசனத் ஆகிய மூவருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

கடந்த 5 ஆம் திகதி நிகழ்ந்த இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய கோட்டைப் பொலிஸார் சந்தேகநபர்கள் மூவரையும்கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## பொலிஸ் கொன்ஸ்டபிள் உப்பாறில் புலிகளால் கைது!

திருகோணமலை உப்பாறிலுள்ள தச்சன் காட்டுப் பகுதியூடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் அத்துமீறி நுழைந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு தமிழீழ காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சீனன்குடா பொலிஸ் நிலையத் தைச் சேர்ந்த விஜயதாஸ சுமன் நிலாந்த என்ற கொன்ஸ்டபிளே கைது செய்யப்பட்டவராவார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கொன்ஸ்டபிளை இன்று காவற் துறையினர் தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவுள்ளதாக திருகோணமலை செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

## சதிமுறியடிப்புச் சமரில் 8 போராளிகள் வீரச்சாவு!

11.04.2004 அன்று கருணாவின் சதிமுறியடிப்புச் சமரில் 8 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக விடு தலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வீரவேங்கை தேன்முகில் (தங்கவேல் வசந்தகுமாரி/தேவி - கரடிய னாறு), வீரவேங்கை தோகையெழி (இராசநாயகம் இந்துமதி - தும்மங் கேணி - திக்கோடை), வீரவேங்கை சிவாசி (பாலசுந்தரம் தேவிகா - 9 ஆம் வட்டாரம் - கொக்கட்டிச்சோலை), வீர வேங்கை தாரணி (இராசதுரை ரதி - கரடியனாறு - கொலனி - உன்னிச்சை வீதி - மட்டக்களப்பு).

வீரவேங்கை செல்வி (பாலசிங்கம் மோகனா - பால்சேனை - அம் பாறை), வீரவேங்கை கதிரொளி ( தர்மலிங்கம் வனிதா - முனைக்காடு - கொக்கட்டிச்சோலை), வீரவேங்கை கதிரமுது (கதிர்காமத்தம்பி அம்பிகாவதி/ அம்பிகா - பெரியபுல்லுமலை - உறுகாமம் - மட்டக்களப்பு), வீரவேங்கை கங்கை/ இன்பரூபா (வீரசிங்கம் சிறிதேவி - கன்னங்குடா - மட்டக்களப்பு) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந் தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### புலிகளுக்கு...

தொடர்பாக பகிரங்க அறிவித்தல் ஒன்றை மறுப்பாராக இருந்தால் எமது கட்சி எதிரணியில் அமர்வது உறுதியானது.

ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே விடுதலைப் புலிகளுக்கு வடக்கை போர்நிறுத்த உடன் படிக்கை மூலம் கொடுத்துவிட்டார்.

ஜனாதிபதி கிழக்கை உடன் படிக்கை மூலம் தமிழீழ விடு தலைப் புலிகளுக்கு கொடுக்கத் துணிந்துவிட்டார். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிய மைக்க ஜே.வி.பி. ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (01)

### பொதுக்கட்ட...

அவர் கூறியதாவது -

நாடு பிளவுபடாத வகையில் வடக்கு - கிழக்கு மக்களுக்கு உதவ வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் ஜனாதிபதி இருக்கிறார். சுனாமியால் பாதிக்கப்பட்ட சகலருக்கும் இன, மத பேதமின்றி நிவாரணம் அளிக்கப்பட வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

இந்தக் கட்டமைப்பில் அரசாங்க அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய சமூகப் பிரமுகர்கள், சிவில் அதிகாரிகள் எனப் பலரும் இடம் பெறுகின்றனர்.

அதுமட்டுமன்றி நிதியமைச்சு ஊடாகவே அபிவிருத்திக்கான நிதி வழங்கப்படும் என்பதால் இதனை எதிர்க்கவேண்டிய தேவையில்லை.

குறிப்பிட்ட விடயமானது நாட்டுக்கு பாரதூரமானதல்ல. இந்த நிலையில் இதற்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது புத்திசாலித்தனமானதல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

## அமைச்சரவை மாற்றம் விரைவில் நிகழலாம்!

கொழும்பு ———

பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாக ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியான சூழ்நிலையிலும்- மற்றொரு அமைச்சரவை மாற்றம் நிகழவுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த விரைவான அமைச்சரவை மாற்றத்திற்குக் காரணம் மேல் மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் குரேவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அமைச்சர் பதவிகோரியுள்ளமை என்பதனாலாகுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனுடன் அமைச்சரவையில் உள்ள சிலரது செயற்திறன் இன்மை காரணமாக தோன்றியுள்ள சிக்கலான நிலைமையினால் சில அமைச்சுப் பதவிகளை மாற்றுவதற்கு நேர்ந்துள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

தற்போது ஜனாதிபதியிடமுள்ள கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சை றெஜினோல்ட் குரேவுக்கும், ஆறுமுகன் தொண்டமான் மற்றும் பிரதியமைச்சர்களான டிலான் பெரேரா மற்றும் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

காலாநிதி மேர்வின் சில்வாவிற்கு பிரதியமைச்சர் பதவியொன்றை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். தொண்டமான் கேட்ட நகர அபிவிருத்தி அமைச்சை தினேஸ் குணவர்த்தனவிடமிருந்து ஜனாதிபதி மீளப்பெற விரும்பாத போதிலும் - தொண்டமானுடன் கலந்துரையாடி வேறொரு அமைச்சுப்பதவியை அவருக்கு வழங்கி அவரது எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்கும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனத் தெரிய வருகிறது. (தே)

### ஜே.வி.பி விலகினாலும்...

அரசுக்கு ஆதரவு வழங்குவதென்பது நிர்வாகத்தோடு இணைந்து கொள்வதாகக் கருதமுடி யாது. மாறாக அரசைக் கவிழ்ப்பதற்கு ஐ.தே. கட்சி ஆதரவு வழங்காது என்பதாகும். அரசைக் கவிழ்ப்பதற்கு, நாடாளுமன்றில் மற்றைய கட்சிகளுக்கு இடம் வழங்கப்படமாட்டாது.

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டால், அரசிலிருந்து ஜே.வி.பி. விலகுமென அந்தக் கட்சி அறிவித்ததைச் செயற்படுத்துமானால், ஐக்கிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு வருமாறு அனுரா பண்டாரநாயக்க ஐ.தே.கட்சிக்கு அண்மைய சில நாட்களில் அழைப்பு விடுத்திருந்தார்.

அனுராவின் இந்தக் கோரிக்கையையடுத்தே, அரசில் இணைந்து கொள்ளாமல் வெளியிலிருந்து அரசுக்கு ஆதரவை வழங்கி அதனை கவிழாமல் செய்வதற்கு ஐ.தே.கட்சி தீர்மானித்தது என அவர் தெரிவித்தார். (தே)

### விடுதலைப் புலி...

ஆனால், ஜனநாயக நீரோட்டத்தில் செயற்படுகின்ற தமது உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற யோசனை தவிர்ந்த வேறு யாராவது யோசனைகளைத் தெரியப்படுத்தினால் அதனை எதிர்க்கின்றனர். இவ்வாறான செயற்பாடும் ஒரு வன்முறைதான்.

ஜனநாயக நீரோட்டத்துக்குள் வரத் தயாராகவிருப்பதாக தற்போது புலிகள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். இந்த விடயம் உண்மையோ பொய்யோ எமக்குத் தெரியாது. ஆனால் எமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை ஜனநாயக நீரோட்டத்துக்குள் இழுக்க நாம் முயற்சிப்போம்.

நிறைவேற்று ஜனாதிபதி என்ற முறையில் ஒரு அமைச்சர் கூட இல்லாமலும் அமைச்சரவை இல்லாமலும் அனைத்து அமைச்சுக்களையும் எனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அரசாங்கத்தைக் கொண்டு செல்லமுடியும். அல்லது யாரையாவது வரச் சொல்லி நாடாளுமன்றத்தை ஒத்தி வைக்க முடியும். வரவு - செலவுத்திட் டம் வரும்வரை எவ்வாறும் நடத்த முடியும். அதற்கான அதிகாரங்கள் என்னிடம் இருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

## எத்தகைய எதிர்ப்புக்கள்...

டக்கியதான பொதுக்கட்டமைப்பு ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை கூட்டமைப்புப் பிரதிநிதிகள் தெரிவித்த போது அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா -

இந்த விடயத்தை முன்னெடுத்துச் செல்வதில் தனக்குப் பல இடையூறுகள் ஏற்படுகின்றபோதிலும் இந்த விட யத்தில் தான் மிகவும் உறுதியாக இருப்பதாகக் குறிப்பிட்டார். அதனுடைய முழுமையான நோக்கத்தையும் நிறைவேற்றக்கூடிய விதத்தில் பொதுக்கட்டமைப்பை அமுல் படுத்த தான் திட்டமிட்டிருப்பதாகவும் இதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென்றும் ஜனாதிபதி சந்திரிகா கூட்டமைப்பு பிரதிநிதிகளிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து திருமலையில் உருவாகியுள்ள நிலைமைகள் தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

அரசாங்க தூதுக்குழுக்கள் அங்கு சென்று வந்துள்ளன. அப்போது அவர்களால் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவை நிறைவேற் றப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய கூட்டமைப்பினர் அவை அனைத்தும் நிறைவேற்றப்படவேண்டும் எனவும் அதற்கான உத்தரவுகளை ஜனாதிபதி பிறப்பிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண் டனர்.

இதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி அரசாங்கத்தின் தூதுக்குழு நாளை திருமலைக்கு மீண்டும் செல்லவுள்ளதைச் சுட்டிக்காட்டி - தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகளையிட்டு அப்போது ஆராயலாம் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், உறுதியளிக்கப்பட்டது போல் மேலதிகமாக அனுப்பப்பட்ட படையினர் படிப்படியாக வாபஸ் பெறப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். இதனைவிட பொதுக்கட்டமைப்பு விவகாரத்தால் உருவாகியுள்ள நிலைமைகள் தொடர்பாகவும் இருதரப்பினரும் விரிவான முறையில் ஆராய்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்க் கூட்டமைப்பு பிரதிநிதிகள் தூதுக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிறேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

இந்துப் பேச்சுக்களின்போது ஜனாதிபதிக்கு உதவியாக பிரதி அமைச்சர் டிலான் பெரேரா கலந்துகொண்டார்.

## மரண அறிவித்தல்

### டாக்டர் மயில்வாகனம் இராசையா

(R.M.O)

(வேலணை அரசினர் வைத்தியசாலை)



ஊரிக்காடு வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட Dr.மயில் வாகனம் இராசையா நேற்று (12-06-2005) ஞாயிறு காலை 11 மணியளவில் இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (13-06-2005) மாலை 2 மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: இ

இ.விமலாவதிபுஸ்பம் (மனைவி)

S. ரமேஸ் (ச.நீ) - (மருமகன்)

(உள்ளூராட்சி உதவியாளர், மானிப்பாய்)

உடுப்பிட்டி வடக்கு,
V.V.T.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.